Regd. No. M. 4900. 16-பக்கங்கள். தனிப்பிரதி விலை 0-2-0.

குடி அரசு

ESTD. 1924

வருட சந்தா உள்நாடு ரூ. 7-0-0. வெளிநாடு ரூ. 9-0-0.

மாலை 21 ஈரோடு 10-7-1948 சனிக்கிழமை மலர் 44.

திராவிடத் தனியாட்சியில் இல்லாதவை.

★

எண்சீர் விருத்தம்.

(1) தனியாட்சி திராவிடத்திற் சாதி யில்லை
சத்தற்ற இழிதன்மைக் கடவு ளில்லை
பனியாவின் பார்ப்பானின் சுரண்ட லில்லை
பணக்காரன் ஏழையென்ற சொல்லே யில்லை
இனிதான வாழ்வில்மன வெறுப்பே யில்லை
எழுத்தறியா ஆண்பெண்கள் எவரு மில்லை
மனிதாபி மானமதிற் குறைவொன் றில்லை
வரிவாங்கி அரசோச்சும் முறையு மில்லை.

(2) வஞ்சகமாய்ப் பொருள்பறிப்போர்க் கிடமே யில்லை
மானமிழந் துயிர்பிழைக்கும் தன்மை யில்லை
பஞ்சையராய் அறிவிலராய் மக்க ளில்லை
பகுத்தறிவுக் கொவ்வாத நூல்க ளில்லை
வஞ்சியர்கள் ஆடவருக் கடிமை யில்லை
வண்டமிழை மறந்தார்க்கு வேலை யில்லை
நஞ்சனைய மூடமதக் கொள்கை யில்லை
நாட்டினிலே எந்நாளும் வறுமை யில்லை.

(3) உடல்வருந்த ஓய்வின்றி யுழைப்ப தில்லை
உணவுக்கும் துணிமணிக்கும் பஞ்ச மில்லை
கடவுளுக்கும் நமக்குமிடைத் தரக ரில்லை
காசுபல செலவழித்துத் தொழுத லில்லை
மடமையெனும் கள்ளிதனை வளர்ப்ப தில்லை
வளருமறி வுக்குமுட்டுக் கட்டை யில்லை
வடவர்கையில் நம்குடுமி யிருப்ப தில்லை
மக்களெலாம் மாக்களென ஆவதில்லை.

"டி. பி. வேலாயுதசாமி"

பெண்கள் பகுதி:

செம்மையான சீர்திருத்தம்!

“தோழியர் நா. தா. பேபி.”

★

உலகில் ‘ஆண் இனம் என்னும் மரத்திற்கு ஆணிவேர் போன்றது அணங்கு இனம்’ என்பர் அறிஞர். அஃதாவது ஒவ்வொரு ஆடவனும் தன் வாழ்வை வளப்படுத்திக்கொள்ள,—நலிவு நீங்கி வலிவுடன் வாழ, ஒரு அணங்கின் உதவியைப் பெரிதும் பெற வேண்டிய நிலையிலிருக்கிறான். அதே போன்று, ஒரு அணங்கு தான்வாழ, நலம்பெற, வளமுற ஒரு ஆணை எதிர்நோக்கும் நிலையில் தான் உள்ளாள். அவள் தானாக வாழ, வழிவகையற்றவள். இயற்கையிலேயே அவளுக்கு வளம் கிடையாது. இது பற்றித்தான் அறிஞர் பெண்ணைச் சந்திரனோடு ஒப்பிடுவர். இங்ஙனம் ஒரு சதிபதிகள் வாழ்விலும் தாழ்விலும், சுகத்திலும் துக்கத்திலும், நன்னிலையிலும் நல்குரவிலும், கிடைப்பிலும் இழப்பிலும் மாறாத மனநிலையை அடைய, வெற்றிகண்டு மகிழ்தலும், தோல்வி கண்டு துக்கித்தலுமான நிலையை அறவே மாய்க்க அவர்களிருவரையும் ‘உண்மை அன்பு’ என்னும் கயிறு பிணைக்க வேண்டும். இருவரிடையேயும் அன்னியோன்னிய மனப்பான்மை இருத்தல் மிக மிக முக்கியம். இதனால்தான் பெரியோர், “காதலர் இருவர் கருத்து ஒருமித்து ஆதரவு பட்டதே இன்பம்” என்று கூறியுள்ளனர். அவ்வாறின்றி மணமகனின் பெற்றோராவது, அன்றி இருவருமில்லாமல் இடையே ஈடுபடும், மிகப்பாடுபடும் தரகரோ விரும்பி மணம் செய்வித்து விடும் பரிதாப நிலை இந்தத் தமிழ் நாட்டில் இன்றும் உண்டு.

“என்னப்பா சோமு! நீ என்ன உன் மனைவியோடெ பேசறது கூட இல்லே போலிருக்கே. சே, சே! இருந்தாலும் நீ ஒரு கல் நெஞ்சன் அப்பா’

“உனக்குத்தெரியாது கண்ணா! என் துர்ப்பாக்கிய நிலைமை! தெரிஞ்சா இப்படிச் சொல்ல மாட்டே. அந்த எழுவெடுத்த கிழங்கள் (என் பெற்றோர்கள்) ரொம்பச் சிரமப்பட்டு இந்த உதவாக்கரைச் சனியனைக் கொண்டு வந்து என் கழுத்திலே கட்டித் தொலைச்சாங்க. என்னோடெ பொறாத காலம்.”

மேலே காட்டப்பட்டிருப்பதைப் போன்ற உரையாடல்கள் நாள் தோறும் நம் நாட்டில் பல்லாயிரம் உண்டு.

“என்னமோவேணி! உன்குணத்துக்கும், அறிவுக்கும், அழகுக்கும் உனக்குக் கணவன் இப்படி வாய்க்கக் கூடாது”.

“ஆமாம். அதற்கு யார் என்ன செய்ய முடியும் இனிமேல்? 7வேலி நிலந்தான் என் அப்பா, அம்மா கண்ணுக்குப் பட்டதே தவிர, இந்த வீட்டுக் கிழவனின் வயது எவ்வளவென்று படவில்லையே! என் அண்ணன் மட்டும் தலை தலை என்று அடித்துக் கொண்டார். ‘கிளியை வளர்த்துப் பூனை கையில் கொடுக்கிறாப்போல் செல்லமாக வளர்த்துக் கடைசியில் இவ்வளவு வயதான இந்தக் கிழவனுக்குக் கொடுக்கிறோமே’ என்று! அவ்வளவு சீர்திருத்தமான சிறந்த வார்த்தையைக் கேட்க யார் இருந்தார்கள் எங்கள் வீட்டில்? இந்தத் துர்ப்பாக்கிய நிலைமை என்று மாறுமோ? என் நிலைமையிலுள்ள என் சோதரிகள் பலரது கவலை என்று தீருமோ?”

இம்மாதிரி உரையாடல்களும் அவனியில் அனந்தம்.

இந்நிலை ஏற்பட்டதேன்? நன்னிலை நாசமடைந்ததேன்? எங்கிருந்து பிறந்தது இந்த இரங்கத்தக்க நிலை? பழந்தமிழ் நாட்டில் இருந்ததா இப்பரிதாபகரமான நிலை? தமிழ் நாட்டுச் சோதரிகள் இங்குதான் நன்கு சிந்திக்க வேண்டும். இந்நிலையைக் கனவிலும் கண்டதல்ல நம்தமிழ்நாடு. முன்னாட்களில்......அதாவது ஆரியர் தொடர்பு ஏற்படுவதற்கு முன்னாட்களில்!......

அந்தக் காலத் தமிழ் மக்கள் வாழ்க்கையை ஆராய்ச்சி செய்து பார்ப்பவர் அறிவர் அனைத்தையும். மணமாகாதமங்கையர்கள்பலரும், மணமாகாத இளைஞர் பலரும் கலந்துறையும் சந்தர்ப்பம் எப்பொழுதும் உண்டு என்றாலும் ஆண்டிற்கோர் முறை நிச்சயமாக உண்டு. அதாவது ‘கன்னிப் பொங்கல்’ என்ற நாளில், கன்னியர்களும், இளங்காளைகளும் கணக்கில்லா அளவில் கூடிக் களிப்பாகப்பொழுது போக்குவார் அன்று. ஒரு இளைஞன் தன்வாழ்விற்குத் துணையாக ஒரு துணைவியைத் தேர்ந்தெடுக்க வாய்ப்பு அந்தநாள். ஒரு பெண் தன்னைத் தன் வாழ்நாள் முழுதும் நல்வழியில் ஈர்த்துச் செல்லக் கூடிய ஒரு இளைஞனைத் தன் மனதிற்குள்ளாகவே வரித்துக் கொள்ளும் சந்தர்ப்பம் அந்நாளில்தான் கிடைக்கும். அந்த அழகான, அறிவுக்குப் பொருத்தமான, நாகரீகத்திற்குட்பட்ட நாள் ‘கன்னிப் பொங்கல்’ மறைக்கப்பட்டு விட்டது. வைதீகம் என்னும் நாகம் நம் வாழ்வுச் சோலையில் நுழைந்த பின்பு அந்த அர்த்தமுள்ள பழக்க வழக்கங்களைக் கண்டு சீறத்தொடங்கிற்று. வாழ்வில் இருள் சூழ்ந்துவிட்டது. ஆரியர்காட்டிய அர்த்தமோ, பொருத்தமோ அற்ற சடங்குகளால் தமிழ் மக்கள்தம் உரிமைகளை யெல்லாம் இழந்தனர் என்பது வெள்ளிடை மலை. அவற்றுள், திருமணக் காரியங்கள் தீயமுறையில் பழக்குவிக்கப்பட்டது மிகமுக்கியம்.

இன்று புரோகிதன் பொருத்தமிருக்கிறதென்றால்தான் திருமணம் ஏற்பாடாகும். இளங்காதலர்கள் இருவர் உண்மைக் காதலால் பிணைக்கப்பட்டு, அவர்கள் உள்ளமாகிய விளை நிலத்தில் உண்மை அன்பு எனும் விதை நன்கு வளர வழிவகை கிடைத்து, தங்கள் வாழ்க்கை வளமுள்ளதோர் சோலையாகுமென்று மனக்கோட்டை கட்டியிருக்கும் நிலையில், படுபாவிப் புரோகிதன் அறிந்தோ, அறியாமலோ எதனையோ நினைத்துக் கொண்டு அவர்கள் இருவரும் எதிரிடையான பொருத்தமுள்ளவர்கள் என்று சொல்லிவிடுவானானால், அவர்கள் வாழ்வு அந்தோ! வறண்ட பாலையாகத்தான் ஆக நேரிடுகிறது. இந்நிலை கண்ட நம் அறிவின் சிகரம், ஆற்றலின் உருவம், திறமையின் பிறப்பிடம், உறுதியின் இருப்பிடம்,

(தொடர்ச்சி 14-ம் பக்கம்)

இதற்கு இரண்டாயிரமா?

நல்ல தீர்ப்பளியுங்கள்!

விடுதலைக்கு ஜாமீன் கேட்டுப்பெற்றுக்கொண்டிருக்கும் சென்னை சர்க்காரின் போக்கு எந்த வகையில் நீதியை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது என்பதைப் பொது மக்கள் அறிந்து, தீர்ப்புக்கூற வேண்டும்; உடனடியாக இல்லாத போனாலும் மறு சந்தர்ப்பம் வருகிற வேளையில், என்பது நமது ஆசை! அதற்காகவே சென்னை சர்க்கார் ஜாமீனுக்குக் காரணமாகக் கூறியவை எவையோ அக்காரணங்களைப் பொதுமக்கள் அறிந்து கொள்ள வேண்டுமென்பதற்காக நாம் சிலவற்றை அப்படியே இங்கு தந்திருக்கிறோம். 1. 9—1—48ம் நாள் விடுதலை தலையங்கம். 2- 12—2—48ம் நாள் விடுதலை தலையங்கம். 1. காந்தியார் கொலைக்கு முன்னால். 2. காந்தியார் கொலைக்குப் பின்னால். காந்தியார் உண்ணாவிரதமிருந்து முடிவில் எந்தெந்த நிபந்தனைகளைக் கூறினாரோ அந்த நிபந்தனையை விளக்குவதுதான் முதல் தலையங்கம். அதாவது காந்தியார் முஸ்லிம்களுக்கு இழைக்கப்படும் தீங்குகள் என்று எவற்றைக் குறிப்பிட்டாரோ அவற்றையே முதல் தலையங்கம் குறிப்பிடுகிறது. அவ்வாறு குறிப்பிட்டதற்குத் தானே காந்தியார் கொல்லப்பட்டார்; அதையே குறிப்பிடுகிறபோது நாங்கள் ஏன் "கோட்சே" ஆகக்கூடாது என்கிறது சென்னைசர்க்கார்.

காந்தியார் கொலைக்கு உண்மைக்காரணமாயிருந்தது எந்த மதவெறியுணர்ச்சியோ, நேரு முதலிய பார்ப்பனர்களாலும் எந்த மதவெறியுணர்ச்சி என்று சொல்லப்பட்டதோ அதை விளக்குவதுதான் 2வது தலையங்கம். அதாவது காந்தியார் கொலையைப்போல மற்றொரு கொலை நாட்டில் நடக்கவிடக் கூடாது; நடப்பதற்குக் காரணமான சக்திகள் எவையோ அவற்றை அழித்துவிட வேண்டுமென்பது 2வது தலையங்கம். இது மற்றொரு குற்றமாம்!

குற்றமாகுமா? குற்றமென்றால் இந்துக்களும் முஸ்லிம்களும் அடித்துக்கொண்டு சாகவேண்டியதுதானா? காந்தியார் போன்றவர்கள் தெருவில் நாய்களைப் போலச் சுட்டுக்கொல்லப்படவேண்டியவர்கள் தானா? இதுதான் நீதியா? நேர்மையா? நல்ல தீர்ப்பளியுங்கள்!

(1)

ஒரே குடும்பத்தில் இருக்கமாட்டாமல், பாகம் பிரித்துக்கொண்டு போன மகனைப் பார்த்து, "இவன் எத்தனை நாளைக்கு வாழப்போகிறான், பார்க்கிறேன்," என்று கூறும் தகப்பனைப் போல இந்துஸ்தான் தலைவர்கள் பாக்கிஸ்தான் மீது அருவெறுப்புடனேயே நடந்துகொண்டு வருகின்றனர். பாகிஸ்தான் என்ற தனி நாடு ஏற்படக் கூடாது என்பது இந்துஸ்தான் தலைவர்கள், அதாவது காங்கிரஸ்காரர்களின், உறுதியான எண்ணமாக இருந்திருக்குமேயானால், "என்ன நேர்ந்தாலும் நேரட்டும், பிரிவினைக்கு ஒப்புக்கொள்ள முடியாது." என்றல்லவா கூறியிருக்கவேண்டும்? "வாளுக்கு வாள்" என்று படேல் சபதங் கூறியபடியல்லவா நடந்திருக்க வேண்டும்? அதைவிட்டு, எப்படியாவது வெள்ளையன் ஆதிக்கம் ஒழிந்தால் போதும், பிறகு எப்படியோ பார்த்துக்கொள்ளலாம் என்ற உள் எண்ணத்தின் மீது, அதிகாரத்தைக் கைப்பற்றிக்கொண்ட பிறகு, இப்போது பாகிஸ்தானுக்கு எத்தனை இடையூறுகள் செய்ய முடியுமோ அத்தனையும் செய்யத் தொடங்கியிருக்கின்றனர். ஆனால், பாகிஸ்தான் தலைவர்கள் செய்வதெல்லாம் சரியென்றோ, அங்கு முஸ்லிம் அல்லாதவர்களைக் கொடுமைப்படுத்துவதெல்லாம் முழுப் பொய் என்றோ, நியாயம் என்றோ, நாம் கூறவில்லை.

குண்டர்களும் காலிகளும் ஒரு வகுப்புக்கோ, ஒரு மதத்துக்கோ, ஒரு நாட்டுக்கோ மட்டும் சொந்தமல்ல. குண்டர்கள் எல்லாக் கட்சிகளிலும் இருக்கிறார்கள். அவர்களைத் தூண்டி விட்டுவிட்டு, அஹிம்சாதர்மம், மனிதத் தன்மை, ஆகியவை பற்றி அறிக்கை விட்டு ஏமாற்றும் தலைவர்களும் எல்லாக் கட்சிகளிலும் இருக்கின்றனர்.

ஆனால் மெஜாரிட்டி பலத்தையும் மௌடீக மக்களின் மத வெறியையும் நம்பிப் புதிதாக உண்டாக்கப்பட்ட ஒரு சிறிய நாட்டின் மீது (பாகிஸ்தான்) போர் தொடுப்பதோ, விஷமப் பிரசாரம் செய்வதோ, ஆவேசத்தைக் கிளப்பிவிடுவதோ, நியாயமல்ல. ஹிந்துஸ்தான் செய்வதையெல்லாம் ஒழுங்கு என்றும், பாகிஸ்தான் மட்டுமே அக்கிரமமாக நடந்து கொள்கிறது என்றும், காங்கரஸ் தலைவர்கள் பேசுவதும், காங்கரஸ் பத்திரிகைகள் எழுதுவதும் நடு நிலைமையிலுள்ளவர்களுக்கு வெறுப்பையே தருகிறது.

பாகிஸ்தான் பிரியவேண்டும் என்ற தத்துவத்தை, அதாவது, சுய நிர்ணய சுதந்தர உரிமையை நாம் ஆதரிக்கிறோமே தவிர, பாக்கிஸ்தான் ஆட்சியாளர் எது செய்தாலும் சரி என்று நாம் கூறவேயில்லை.

இன்றைய நிலைமை, இந்த இரு நாடுகளுக்கும் விரைவில் போர் ஏற்படுமோ என்று அஞ்சக்கூடியதாகவே இருக்கிறது. ஜுனகாத் புகைச்சல் இன்னும் நின்றபாடில்லை. ஹைதராபாத் பிரச்னை குழப்பத்திலேயே இருக்கிறது. காஷ்மீரிலோ போர் நடந்துகொண்டிருக்கிறது. ஐக்கிய நாடுகள் சபையின் தீர்ப்புக்குக் காத்திருக்க வேண்டிய அவல நிலை ஏற்பட்டிருக்கிறது. லட்சக் கணக்கான மக்கள் குடும்பம் குடும்பமாய், ஆடுமாடுகளைப் போல, பாக்கிஸ்தானுக்கும் ஹிந்துஸ்தானுக்கும் மாற்றப்பட்டிருக்கின்றனர். அரசியல் நிபுணர் எனப்படும் ஜின்னாவோ, அந்தராத்மாவின் துணைகொண்டவர் எனப்படும் காந்தியாரோ இருவரில் எவராலும் இதைத் தடுத்து நிறுத்த முடியவில்லை.

இதற்கிடையில் ரிசர்வ் பாங்கியிலிருந்து தனக்குச் சேரவேண்டிய 55-கோடி ரூபாயையும் தன் கணக்குக்கு மாற்றவேண்டுமென்று பாக்கிஸ்தான் கேட்டது. ஹிந்துஸ்தான் மறுத்தது. பிறகு ரிசர்வ் பாங்கையே நேரில் கேட்டது, பாகிஸ்தான். ரிசர்வ் பாங்கும் மறுக்கவே, தங்கள் அனுமதியில்லாமல் ரொக்க இருப்பில் கை வைக்கக் கூடாது என்று உத்திர விட்டு விட்டது. ரிசர்வ் பாங்கிடமிருந்த 400 கோடி ரூபாய் ரொக்கத்தில் 75-கோடி ரூபாய் பாகிஸ்தானுக்குக் கொடுப்பது என்று ஏற்பட்ட ஒப்பந்தப்படி பாகிஸ்தான் 20-கோடி ரூபாய் தான் பெற்றிருக்கிறது. பாக்கியுள்ள 55-கோடியைப் பற்றித்தான் இப்போது சச்சரவு ஏற்பட்டிருக்கிறது. இந்தப் பணத்தைக்கொண்டு காஷ்மீர் போராட்டத்திற்கு உதவி செய்யப்படுகிறது என்பதுதான் ஹிந்துஸ்தான் தலைவர்களின் குற்றச்சாட்டு.

ஆனால் ரிசர்வ் பாங்க் ரொக்க இருப்புப் பங்கு சம்பந்தமாக ஒப்பந்தம் ஏற்பட்ட சமயத்தில் காஷ்மீரோ, ஹைதராபாதோ, அல்லது வேறு எந்தவிதமான அரசியல் விவகாரமோ, இத்துடன் பிணைக்கப்படவேயில்லை. இதை எவரும் ஒப்புக்கொண்டே தீரவேண்டும்.

இவ்வளவு சிக்கல்களுக்கிடையே லண்டனிலுள்ள ஸ்டர்லிங் இருப்புத் தொகையை எப்படிப் பிரித்துக்கொள்வது என்பதுபற்றிக் கலந்து பேசவ

(தொடர்ச்சி 13-ம் பக்கம்)

ரோஜா முத்தையா

உலகை வளர்ப்போர்!

★

பண்டைக் காலத்தில் அரசர்களும், தனவந்தர்களும் மிகுதியான பொருள்களைச் செலவுசெய்து ஆலயங்கள் அமைத்திருக்கின்றார்கள். முதன் முதலில் மரத்தாலேயே ஆலயங்கள் ஏற்பட்டிருந்தனவென்றும், அதற்குப் பிற்காலத்தில் தான் கற்களால் கட்டி முடித்தனரென்றும் ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றார்கள். இவ்வாலயங்களின் வளர்ச்சியின் பொருட்டும், பாதுகாப்பின் பொருட்டும் அனேகமான பொருட்களைப் பலர் அளித்திருக்கின்றார்கள். ஒவ்வொரு கோயிலின் பேராலும் ஏராளமான நிலங்களும் விடப்பட்டிருக்கின்றன. சோழகுலத் தாசனாகிய குலோத்துங்கன் சிதம்பரத்திலுள்ள ஆலயத்திற்குப் பொன்னால் ஓடுகள் செய்து வேய்ந்தானென்றும் அதனால் அவனுக்கு ஓர் சிறப்புப் பெயர் கிடைத்ததென்றும் சாசனங்களும் கூறுகின்றன.

இங்ஙனமாக ஏற்படுத்தப்பட்ட கோயில்கள் அவசியமா என்று-வினாவினால் நியாயமான முறையில் ஆஸ்திகர்களுங் கூட வேண்டியதில்லையென்றுதான் கூறவேண்டியிருக்கும். ஏனெனில் கடவுள் உருவமற்றவர், பெயரற்றவர், இன்ப துன்பம் சேராதவர், இயற்கையாக வினையிலிருந்து நீங்கினவர். இன்னவாறென்று அவர் தன்மையைக் கூறுவதற்கு முற்றுமுணர்ந்தவர்களாலும் முடியாதென்று அவரிலக்கணங் கூறியிருக்க, அறிவிற்கும், சிந்தைக்கும், மொழிக்கும் எட்டாத ஒரு பொருளைக் கற்சிலை முதலியவற்றுள் அடங்கினதாகப் பாவித்து வைத்து அச்சிலைகளுக்குப் பல ரூபங்கொடுத்து அதற்காகக் கோவில்கள் வேண்டுமென்று பெரும் பணம் செலவு செய்வதும், மக்களின் வாழ்க்கைக்கு உள்ள தொழில்கள், போகபோக்கியங்கள் எல்லாமும் கடவுளுக்கும் உண்டென்று ஏற்றிவைத்துக்கொள்வதும் அறியாமையல்லவா? ஓர் அறிஞர் கடவுளைப் பற்றிக் கூறுமிடத்து "என்னைத் தோத்திரம் செய்கின்ற பெரியவர்களையெல்லாம் நான் ஒத்தவனாகின்றேன். அது எவ்வாறென்னில் அவர்களும் உனது தன்மையை அறியாமல் தங்களுக்கு முன்னே உள்ளவர்கள் கூறியவாறே · கூறியிருக்கின்றனர். யானும் அவ்வாறே எனக்கு முன்னோராகியவர்கள் கூறியவாறே கூறுகின்றேன்" என்று சொல்லியிருக்கின்றார். இங்ஙனமாய கடவுளை ஓர் குறிப்பட்ட உருவத்தில் அமைத்து அதற்கு ஆலயம் அமைத்து வீண் பொருள் செலவு செய்தலும், அக்கோயில்களில் கடவுளின் அருகே பார்ப்பனரன்றிப் பிறர் செல்லக்கூடாதென்பதும், தாழ்த்தப்பட்டார் என்பவர்கள் கோவிலுக்குள்ளேயே நுழையக்கூடாதென்பதும் எவ்வளவு அறிவீனம்?

இவ்விடத்தில் ஓர் பெருத்த சந்தேகம் தோன்றுகிறது. அதாவது கடவுள் எங்கும் நிறைந்தவர் என்று கூறியிருத்தலின் தாழ்த்தப்பட்டவர்களுள்ளும் கடவுள் நிறைந்துதானேயிருப்பார் அப்படியிருக்கத் தாழ்த்தப்பட்டவர்கள் கோயிலுக்கு வந்தால்மட்டும் தீட்டு எங்கிருந்து வந்துவிடும்? இது நிற்க.

இங்ஙன மாய ஆலயங்களுக்கு மக்கள் சென்று தரிசிக்க வேண்டியது அவசியமாவென்று பார்த்தால் அவசியமில்லையென்று தோன்றுவதோடு கோவிலுக்குச் செல்லுவதால் பல கெடுதிகளும் உண்டாகின்றனவென்பதை யாரே மறுக்க வல்லார்? முதலாவதாகத் தூரதேசம் செல்வதற்கு வீண் செலவும், உடல் நலக் குறையும் உண்டாகின்றன. ஆனால் வேறு தேயங்களையும் அங்குள்ள வளப்பங்களையும் காணுதலும் ஆலயமுள்ள நகரம் சிறந்ததாகவிருப்பின் அதனைக் காணுதலும் அவசியமன்றோவெனில், அவ்வாறு சிறந்த நகராகவும், வளப்பமுடைய தேயமாகவும் அல்லாத சிற்றூரிலும், சுகாதாரக் குறைவான இடங்களிலும் ஆலயங்கள் அமைந்திருத்தலின் அதுவும் பொருந்துவதாயில்லை.

இப்பொழுது கோவில்களுக்குச் சென்றால் அங்குள்ள எண்ணெய்ச் சிக்குநாற்றமும், வௌவால்களின் மலமூத்திரங்களின் நாற்றமும், எப்பொழுதும் தண்ணீரையூற்றுவதால் உண்டான வதியும் ஒரு சிறிது நேரமும் உள்ளே தங்கவிடாமல் வெளியே வரச் செய்கின்றன. இங்ஙனமாய நிலையில் கடவுளைத் தரிசித்து அவரிடத்தில் மனத்தோடுகூடிய வந்தனை வழிபாடுகள் செய்வது முடியுமா? அன்றியும் அங்குள்ள குளங்களின் நிலைமை சொல்லவும் முடியாத ஆபாசங்கள் நிறைந்திருக்கின்றன. இதனைத்தான் திருக்குளமென்று கொண்டாடுவதுடன், இக் குளத்துத் தண்ணீரையே தீர்த்தமென்று சொல்லி அருந்துகிறார்கள். இதனால் நோய்கள் உண்டாவதற்கு தடையென்ன? இக் கோவில்களில் நடக்குந் திருவிழாக்களுக்குக் கணக்கேயில்லை. நினைத்ததற்கெல்லாந் திருவிழாத்தான். இவ்வாறு நடக்குந் திருவிழாக்களில் பார்ப்பனக் குருக்கள்களுக்கு ஊதியம் கிடைக்குமாகையால் எவ்விதக் காரணத்தாலும், வறுமை மிகுந்திருந்தாலும் திருவிழாக்களை நடத்தாமல் விடமாட்டார்கள்.

இத் திருவிழாக்களுக்குப் பல ஊர்களிலிருந்தும் ஏராளமான மக்கள் கூட்டங் கூட்டமாக வருவார்கள். நமது மக்களுக்குள்ள பேதமை காரணமாகத் தங்களிடம் நகைகள் இல்லாவிடினும் பிறரிடம் கடன் வாங்கிக்கொண்டாவது தங்களை நன்றாக அலங்கரித்துக்கொண்டுதான் செல்லுவார்கள். இவ்விதமான திருவிழாக்கள் கள்ளர்களுக்கும் திருவிழாவாகத்தானிருக்கும். அவர்கள் இதற்கென்றே தூரதேயத்திலிருந்தும் வருவதுண்டு. அன்னியரிடம் நகைகள் வாங்கித் தம்மையலங்கரித்துக் கொண்டு வந்தவர்கள் இவ்விதமான திருடர்களுக்குத் தங்கள் நகைகளைப் பறிகொடுத்தும் விடுவார்கள். அதோடுமட்டுமல்லாமல் இங்குள்ள அசுத்தங்களால் வியாதிகளையும் வாங்கிக்கொண்டு ஊர் செல்லுவார்கள். இதுதான் திருவிழாவிற்குச் செல்லுவதாலுண்டாகும் பயன்கள். இதனைக் கண்டுதான் அறிஞர்கள் கோவிலென்பது கள்ளக்கூடமென்றும், விபசாரிக்கூடமென்றும் கூறியிருக்கிறார்கள்.

கடவுள் பக்தியை ஊட்டுவதற்குச் சிலை அவசியமென்றால் அச்சிலை தனித்த ஒரு இடத்தில் இருக்கவேண்டும். கோவில்கள் தேவையில்லை. எல்லோரும் சென்று கண்டு வழிபடலாம். இதற்காகத் தங்கச் சிலைகளும், நகைகளும் ஆடைகளுமாகிய ஆடம்பரங்கள் வேண்டியதில்லை. கடவுளை நமக்கும் உயர்ந்ததான ஓர் பொருள் என்று கருதுவதனால் மக்களுக்குள்ள திருமணம், குடும்பச் சண்டை, தாசி வீடு செல்லல், தூது போதல் முதலிய செயல்களையெல்லாம் ஏற்றி அதற்குத் திருவிழா என்று பெயரிட்டுப் பெரும் பொருள்களை வீணாகச் செலவு செய்வது பொருந்துமா? இதனை நன்றாக எண்ணிப் பார்ப்போமானால் பகுத்தறிவில்லாத மக்களை ஏமாற்றிப் பணம் பறிக்கும் செய்கையே அன்றி வேறொன்றும் காண முடியாது.

கோவிலுக்குச் சென்று கடவுளைத் தரிசிப்பதனாலும் பார்ப்பானுக்குப் பணங்கொடுத்தால்தான் முடியும். எங்கும் நிறைந்த கடவுளைத் தரிசிப்பதற்குக்கூடப் பார்ப்பானிடம் பணம் கொடுத்து அவன் உத்தரவு பெற்றுத்தான் ஆகவேண்டும். நாம் ஆராதனைக்கென்று கொண்டு போகும் பழம் தேங்காய்கள்கூடப் பார்ப்பானிடம் கொடுத்தால்தான் கடவுள் ஏற்றுக்கொள்ளுவாராம். அவைகளை நாமே கொடுத்தால் அவர் ஏற்றுக்கொள்ள மாட்டாராம். சுங்கச்சாவடியைப்போல் சில கோயில்களில் நுழைவதற்கு வரியும் வசூலிக்கின்றார்கள். சாமிக்கு அபிடேகம் செய்வதென்று கொட்டும்

(தொடர்ச்சி 13ம் பக்கம்)

ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

கதை கற்பனை.

சிறுகதை போட்டி
முதற்பருவம். எண் 5.

சேற்றில்முளைத்த தாமரை

நீலவானம் மேகம் சூழ்ந்திருந்தது. நந்த வனத்தில் மலர்ந்த மல்லிகை மலர்கள் எங்கும் நறுமணத்தை அள்ளி வீசிக்கொண்டிருந்தன. பறவைகளின் ஒலிகள் புரட்சியின் சங்க நாதத்தை நினைப்பூட்டின. மேன் மாடத்தின் சாளரவழியே குமுதமணி பார்த்துக் கொண்டிருந்தாள். இயற்கையின் எழிலில் அவள் மனம் நாடவில்லை. மலரின் மணத்தில் அவள் மனம் அமைவு கொள்ளவில்லை. பறவைகளின் கீதம் அவளைக்களிக்கச் செய்யவில்லை. சொல்லமுடியாத சோகம் அவள் கருவிழிகளில் படர்ந்திருந்தது. அவள் முகத்தில் சிந்தனையின் ரேகைகள் தெளிவாகத் தெரிந்தன.

குமுதமணி! ஆம்! அவள்தான் ஆரியத்தை நிலைக்கச் செய்ய உறுதி கொண்ட ஆத்மநாதய்யரின் ஏக புதல்வி. பெரிய மிராசுதார். அளவிலாப் பொருள் படைத்தவர். புராணங்களில் வல்லுனர். திராவிடத்தில் ஆரியம் மடிவது கண்டு மனம் பொறாது, திட்டம் பல தீட்டி அல்லும் பகலும் அதற்கானவை செய்ய முனைந்தவர்.

குமுதமணி சேற்றில் முளைத்த தாமரை என்று ஊரெங்கும் பேச்சு. படிப்பிலும்சரி, அழகிலும்சரி, அவள் இணையற்றவள். தமிழில் அவள் அறிவைக் கண்டு அறிஞர்கள் பெரிதும் போற்றினர். மக்களில் உயர்வு தாழ்வை அறவே வெறுப்பவள். தென்னாட்டுக்குத் தீங்கிழைத்த ஆரியத்தில் பிறந்ததை அவள் பெருங்குறையென எண்ணினாள். உலகம் போற்றும் பெருமையுடன் வாழ்ந்த திராவிட சமுதாயத்தில் விஷம் ஏற்றியது ஆரியம் என்பதை அவள் ஆய்ந்த தமிழ்க்கலைகளில் கண்டாள். தன் மரபினர் காட்டிய கழுமரத்தில், ஏறிய திராவிட மக்களுக்காகப் பெரிதும் இரங்கினாள். அதற்குப்பிராயச்சித்தமாக, திராவிட மகனொருவனை காதலனாகக்கொள்வதென முடிவு செய்திருந்தாள். அதன் பயனாகவே அவள் மனமும் கண்களும் கட்டழகன் மலர்ச்செல்வனை நாடின. அவனிடந்தான் திராவிடத்தின் தனிப்பண்பை எல்லாவகையிலும் அவள் கண்டாள்.

அவள் வாழ்க்கைப்படகு ஆனந்தமாகச் சென்றுகொண்டிருந்தது. அவளுடைய உயர்ந்த நடத்தையினாலும், திராவிட இனத்தில் அவள் கொண்ட பற்றினாலும், செல்வனின் அன்பிற்கும் மதிப்பிற்கும் தன்னை உகந்தவளாக்கிக் கொண்டாள். எப்பொழுதுமே மனித வாழ்க்கை இன்பமாகச் செல்லுகிறதா? இல்லையல்லவா? திடீரென குமுதமணியின் வாழ்க்கையிலும் ஒரு சூறாவளி தோன்றியது. அது அவள் அமைதியைக் குலைத்தது. சில நாட்களாகவே செல்வனின் சந்திப்பு அவளுக்குக் கிட்டுவதில்லை. அவன் என்ன செய்வான்? திராவிடத்தை வீறுகொண்டெழச் செய்ய அவன் ஓய்வின்றி உழைக்கிறான். மக்களின் மடமையைப் பாரறியப் புகட்டுகிறான். ஆரியத்தின் அட்டூழியத்தை அவனியெங்கும் அம்பலப்படுத்துகிறான். இந்நிலையில் அவன் காதலைப் பற்றி எண்ண நேரமேது. அவன் காதல் திராவிடத்தின் பால் சென்றதில் வியப்பென்ன? அவளுக்கு பூச்சூட்டி, நல்லாடை புடுத்தி, பழம் பெருமையிலேற்ற அவன் மனம் துடிக்கிறது.

"குமுதமணி! கேட்டாயா, இந்தச் சேதியை?" என்று அலறியபடியே அங்கு வந்த தோழி மல்லிகாவின் குரல் குமுதமணியைநடுங்கச்செய்தது.

"என்ன மல்லிகா! என்ன நேர்ந்தது? ஏன் இந்தக்கோலம்?" என்று பதறினாள் குமுதம்.

"திராவிடம் முழுதும் புரட்சி ஆரம்பமாகிவிட்டது. ஆரியத்தைப் பூண்டறுக்க அலைபோல் மக்கள் திரண்டுவிட்டனர். கோயில்கள் பல பள்ளிகள் ஆயினவாம். அகிம்சை வழியில் கட்டுப்பட மக்கள் மறுக்கின்றனராம். கோயில் சொத்துக்கள் கொள்ளை போயின. பிராமணர்கள் பலர், திராவிடக் கொள்கையை ஏற்றுக்கொள்வதாகத் தினசரி பத்திரிகைகளில் அறிவித்துவிட்டனர்; புரோகிதர்களும் பூசாரிகளும் தொழிலை விட்டுவிடுவதாகச்சத்தியம் செய்து விட்டனர். இன்னும் பலர் அய்யர், அய்யங்கார், ஆச்சாரியார், போன்றவைகளைத் தங்கள் பெயர்களிலிருந்துஎடுத்துவிடுவதாகவும், தங்களை திராவிட இனத்தவராகக் கொள்ளுமாறு தலைவர்களுக்கு விண்ணப்பித்துக் கொண்டனர்." என்று கூக்குரலிட்டாள் மல்லிகா.

மல்லிகா! பதறாதே! இவையெல்லாம் நான் எதிர்பார்த்ததே. அறம் வழியல்லா எக்கொள்கையும் என்றும் நிலைத்திரா. மக்கள் மடமையில் என்றும் ஆழ்ந்திருக்க மாட்டார்கள். எளியோனை என்றும் வலியோன் அடக்க முடியாது. உண்மைக் கொள்கைகளைப் புரட்சியால்தான் நிலவச் செய்ய முடியும். ரஷ்யப் புரட்சி ஏற்படக் காரணம் என்ன? உண்மையை எடுத்துச் சொன்னார்கள், வேண்டினார்கள், எச்சரிக்கை விடுத்தார்கள், பணியவில்லை பணம் படைத்தவர்கள். புரட்சியேற்பட்டால் தவறு யாருடையது? மக்களுடையதா? இல்லை. என் தந்தைக்கு இவைகளை முன்னமே எடுத்துச் சொல்லியிருக்கிறேன். ஆயினும் என்? அவர் போக்கை மாற்றத் துணியவில்லை" என்று கவலை கொண்டாள் குமுதமணி.

"குமுதம்! உன் தந்தை வருகிறார். நீ அவரிடம் நிதானமாகப் பேசு. அவர் நிலைகுலைந்திருக்கிறார்." என்று எச்சரித்தாள் மல்லிகா.

"காட்டுமிராண்டிகளாயிருந்த மக்களுக்கு ஞானத்தைப் புகட்டி நாகரீகத்தில் வாழ வழி செய்த நம்மைப் பூண்டோடு ஒழிக்கத் திட்டமாம்! ஏதோ இரண்டொருவர் கத்திக் கொண்டிருக்கிறார்களென்று வாளாவிருந்த பயனல்லவா? இது." என்று கோபாவேசமாகப் பேசிக் கொண்டே ஆத்மநாதய்யர் குமுதமணியிருந்த அறையை நோக்கி வந்தார்.

"குமுதம்! நாஸ்திகர்கள் நாட்டில்குழப்பத்தை உண்டாக்கி விட்டனர். வேறு வழியில்லை: புல்லேந்திய கை வாளேந்தினாலொழியப் பிராமணீயம் நிலைக்காது. அதற்காவன செய்ய நம்மினத்தவர் கூட்டம் கூட்டியிருக்கிறேன். எப்படியும் நாஸ்திகம் ஒழிந்தாக வேண்டும்." என்று ஆவேசமாய்ப் பேசினார்.

தந்தையின் கொதிப்பைச் சற்று குறைத்து சில உண்மைகளைக் குமுதமணி தெள்ளென விளக்கினாள்.

"அப்பா! புல்லேந்திய கை வாளேந்த முற்பட்டால், பிறப்பிலேயே வாளேந்தும் கைகள் வாளாவிருக்குமாவென்று எண்ணுகிறீர்களா? இது வீண் பிரமை. வீரங்காட்டி வாள் முனையில் வெற்றிகண்ட ஆரியர்கள் சரித்திரத்திலேயே இல்லையே. அதுவும் செங்குட்டுவன் மரபில் வந்த திராவிடர்களை வாள் முனையில் வெல்ல என்றும் இயலாது. இராமன் காலம் என்று எண்ணுகிறீர்களா? சூழ்ச்சியில் வெற்றி கொண்டதே நம்மினத்தவர் பெருமையல்லவா? உண்மை வெளிப்பட்டுவிட்டதால் திராவிடத்தின் எழுச்சியை இனி என்றும் அடக்க முடி

★ சாகாவரம். ★

★

மூப்பில்லை, நோயில்லை, ஆண்டவன் உதவியுமில்லை; வரம்பற்ற நெடுநாள் உயிர் வாழலாம்.

—கேலியல்ல.

முன்கருமப்பலனில்லை, தெய்வத்தின் கடாட்சமில்லை, முடிவு தேவை யென்று விரும்பும் அளவு-நாம் விரும்பும் நெடுநாள்வரை உயிர் வாழலாம். —கதையல்ல.

'பக்தா உம் பத்திக்கு மெச்சி உமக்குச் சாகாவரம் அளித்தோம்' என்று ஆண்டவன் ஆசிரால் பெற்றதல்ல. கங்கை நீர்த்தமாடி, காசி விசுவநாதரைத் தரிசித்துப் பெற்ற சாகாவரமல்ல. அறிஞரால்-அறிவியலால் பெற்றது! கோயிலுக்குப் பதில் ஆராய்ச்சிகூடத்தில், ஆண்டவனுக்குப் பதில் அறிஞரால்,அளிக்கப் பெறும் சாகாவரம்.

ஆண்டவனளிப்பதாகக் கூறிய வரம் அன்பனுக்கு மட்டுந்தான் (!) ஆனால் அறிஞரால் அளிக்கப்படும் இவ்வரம் அனைவருக்குமுண்டு. ஆண்டவனைக் காட்டிலும் எத்தனையோபடி அதிகம்!

தேவகுமாரனல்ல, வேத புத்தகத்தில்கூட அதிசயம் செய்துள்ளார் என்று காட்ட. அறிவியக்கத்து மனிதன், சந்தேகமில்லை சாமானிய மனிதனே.

ஆண்டவனால் சாகாவரம் பெற்றோர், செத்தொழிந்தனரே தவிர உயிர் வாழ்ந்தோரைக் காணவே முடியவில்லை. எல்லா வரமும் வாயளவே நின்று விட்டது. ஆனால் அறிஞர் கூறுகிறார் வரம்பற்ற நெடுநாள்வரை உயிர் வாழலாம் என்று!

* *

"அடே சோமு! எங்கேயப்பா ஆளையே காணமுடியவதில்லை? நலந்தானா?''

"என்னமோ உங்கள் புண்யத்தாலே நலந்தான்! சரி! எனக்கு நேரமாகிறது. நான் போகிறேன்!''

"என்னாலாவது என்னப்பா. எல்லாம் ஆண்டவன் செயல். அது சரி திரும்பவும் எப்போது பார்ப்பது?''

"என்னமோ பிழைத்திருந்தால் பார்த்துக் கொள்ளலாம்!''

"ஏனப்பா அப்படிச் சொல்கிறாய்?''

"இன்றைக்கிருப்பார் நாளை இருப்பார் என்று எப்படிச் சொல்லமுடியும்? எல்லாம் ஆண்டவன் செயல். நான் வரட்டுமா?''

"சரி''

* *

'இன்றைக்கிருப்பார் நாளைக்கிருப்பது என்ன நிச்சயம்?' இது வேதாந்தியின் வாய் வேதாந்தமல்ல. முற்றும் துறந்து முடிவை எதிர்நோக்கும் முதியவரின் வார்த்தையுமல்ல. உலகமே அறியா இளைஞர், எதிர்காலத்தில் பல்லாண்டு வாழ வேண்டியர்கள் பேசும்பேச்சு! அவர்கள் இவ்வாறு பேசுவதற்கு என்ன, வாழ்வில் சலிப்பேற்பட்டு விட்டதா? இல்லை! பின்?

வழி வழியே போதிக்கும் வழிமறைகளில் இதுவும் ஒன்று. வாழ்வை நம்பாதே! மண்ணாவது திண்ணம்! நீர்க்குமிழி இளமை! என்பன போன்றவைகளில் 'இன்றைக்கிருப்பார் நாளைக்கிருப்பது என்ன முடிவு?' என்று பேசும் வார்த்தையுமொன்றாகும். அறிவு ஒளி—விஞ்ஞானச் சுடர் வீசு முன்பு தேவைப்பட்ட இப்போதனைகள், இன்று உண்மையில், இளைஞரை உணர்ச்சி குன்றச் செய்யும் சாதனமே. எடுத்த இலட்சியம் நிறைவேறாவிட்டால், மனமுடைந்த போது இவ்வித வேதாந்தங்களே அவர்களைப் பாழ்படுத்தித் தற்கொலை செய்து கொள்ளவும், சன்யாசம் பெறவுமான வழிகளைச் செய்து வந்தன — வருகின்றன. மக்கள் அறிவு வளர்ச்சிக்குத் தடைவிதித்த சுவர்களில் இதுவும் ஒன்று!

இவ்வித வேதாந்தங்களினால் மக்கள் தன்னம்பிக்கை கொள்வதை அறவே ஒழித்து விடுகின்றனர். 'முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்' என்ற எண்ணம் எழும்பினும், இன்றைக்கிருப்பார் நாளைக்கிருப்பதில்லையே, இவை செய்வதால் என்ன பயன்?' என்ற முறையில், எண்ணத்தை—முயற்சியை கைவிட்டுவிடுகின்றனர். மக்களின் மடமையைச் சிகரத்தில் வைத்துக் காண்பிப்பதில் இவைபோன்ற பயனற்ற வேதாந்தங்கள் தலைசிறந்தன!

இவ்வித வேதாந்தங்கள் இல்லையெனில் மக்கள் சரிவர நடக்கமாட்டார்கள் என்று கூறித் தடுத்த—தடுக்கும் பெரியோர்களுக்கு இதை ஒரு எடுத்துக் காட்டாகக் கூற விரும்புகிறேன். வேதாந்தங்களை ஒதுக்கித் தள்ளியுள்ள மேனாட்டைக் கொஞ்சம் ஏறெடுத்துப் பாருங்கள். 'இன்றைக்கிருப்பார் நாளை இருப்பரோ' என்ற கேள்விக்கே முடிவுகட்ட வழி தேடுகின்றனர். என்ன இது? என்று அதிசயிக்க வேண்டாம்! கொஞ்சம் கவனத்தோடு பார்த்தால் போதும்.

மனிதன் பிறக்கிறான், கிழவனாகிறான், மடிகிறான். பிறப்புக்கும் இறப்புக்குமிடையே அவன் பல நிலைகளை மாறியாகித் தீரவேண்டும். அப்படிப்பட்டவைகளில், மனிதனின் அந்திய காலத்தைத் தெளிவுற அறிவிப்பது போல் வந்துறுவது கிழப்பருவமாகும். இந்த மூப்பு—கிழடு மனிதனுக்கு ஏன் தோன்ற வேண்டும்?' 'இந்த மூப்பு மனிதனைப் பிணைக்காதிருக்க வழி என்ன?' இவை தான் மேனாட்டார் ஆராய்ச்சி, இங்கோ ஆண்டவனிடம் சாகா வரத்திற்கு மன்றாடல்! அதற்கொரு முயற்சியோ, ராகதாளம் தவறாத கீர்த்

(தொடர்ச்சி 12-ம் பக்கம்)

யாது'' என்று புற்பல கூறினாள்.

அய்யருக்கு ஆத்திரம் கட்டுமீறி விட்டது. ஆயினும் திராவிடர்கள் விழிப்பை அவர் குறைத்து மதிப்பிட முடியவில்லை. குமுதணியின் கூற்று அவருள்ளத்தில் ஒருபுது விளக்கத்தை உண்டாக்கிவிட்டது. உண்மை நிலையை ஒருவாறுணர்ந்தார். சனாதன தர்மத்தைக் காற்றில் பறக்கவிட்டு, ஏராளமான பிராமணர்கள் சரண் புகுவதே, புரட்சியின் தன்மையை அய்யருக்குத் தெளிவாக விளக்கிற்று. இந்நிலையில் இனத்தலைவர் என்னும் முறையில் ஆத்மநாதய்யருக்கு இறுதிக் கடிதமும் வந்து சேர்ந்தது.

ஆம்! வேறு வழியில்லை. என்ன இருக்க முடியும்? திராவிடத் தலைவர்களைச் சந்தித்துச் சமாதான ஒப்பந்தமொன்றில் கையெழுத்திட்டார் அய்யர். பிராமணர்கள் பிராமணர்களாய் வாழ முடியாமல் சாதாரண மனிதர்களாய் வாழவழி வகுக்கப்பட்டது. ஒப்பந்தத்தை முழுமனதுடன் ஏற்றுக் கொள்வதற்கறிகுறியாக குமுதமணிக்கும் மலர்ச்செல்வனுக்கும் காதல் திருமணம் நடந்தேறியது. ஆம்! புரோகிதம் நீக்கிய திருமணம்தான்!

கிராமத்தானுக்கும் பேபே! நகரத்தானுக்கும் பேபே!

(ஸ்குரு லூஸ்)

"மிஸ்டர் ஸ்குரூ லூஸ்! என்ன பெரிய யோசனையில் இருக்கிறீர்?" என எனது நண்பர் உரத்த குரலில் கேட்ட பின்னர்தான் அவர் எனது அருகில் நிற்பதைக் கண்டேன். பிறகு அவரை ஒரு நாற்காலியில் உட்காரச் சொல்லிவிட்டு எனது யோசனையை விளக்கினேன்;

அது என்னவென்றால், "பாருங்கோ, சார்! மாதம் எனக்கு 300, 400-ரூ. வரவு வருகிறது. ஆனால் கையில் ஒரு காசும் தங்குவதில்லை. அதற்காக ஒரு திட்டம் தயாரித்துக் கொண்டிருந்தேன். அதற்குள் நீங்க வந்து விட்டீர்கள். உங்களிடமும் தான் கலந்து பார்க்கலாமே. எப்படியாவது வரவு வருகிற பணத்தில் ஒரு பைசாக்கூட செலவு ஆகக்கூடாது. அந்த அடிப்படையில் திட்டம் வகுக்கவேண்டும். அது எப்படி என்று கேட்பீர்கள். சொல்லுகிறேன் பாரும். இனிமேல் குடும்பச் சசலவுக்கு என்று ஒருகாசுகூடக் கேட்கக் கூடாது என்று எனது மனைவியிடம் கூறிவிடப் போகிறேன். குடும்பச் செலவுக்குத் தேவையான பணத்தை வீட்டிற்கு விருந்துக்கு வருகிற உற்றார், உறவினர்களிடம் நன்கொடைமாதிரி வசூலித்து அதிலேயே சரிப்படுத்திக்கொள்ளவேண்டும் என்றுதெரிவித்துவிடப்போகிறேன்.

பிறகு எனது கடைச் சிப்பந்திகளிடம் இனிமேல் நீங்கள் என்னைச் சம்பளம் கேட்காதீர்கள். கடைக்குச் சாமான் வாங்க வருகிற பிரமுகர்களில் தாராள மனது படைத்த யாராவது இரண்டொருவரிடம், உங்கள் சம்பளத்தை வாங்கிக்கொள்ளுங்கள் என்று அறிவித்துவிடப் போகிறேன்.

இப்படியாகச் செய்துவிட்டால் வருகிற லாபம் பூராவும் எனக்குத் தானே?" என்று கூறிக்கொண்டே போனேன்.

உடனே எனது நண்பர் குறுக்கே தலையிட்டு எனது பேச்சை நிறுத்தி, "போதும் அப்பா, உனது திட்டத்தின் விளக்கம். ஏது? உனக்கு நிஜமாகவே ஸ்குரூலூஸ் ஆகிவிட்டதுபோல் இருக்கிறதே! இதற்குத்தான் நான் அப்பொழுதே சொன்னேன், புனைப்பெயர் வைப்பதாயிருந்தாலும் யோசித்து நல்லதொரு பெயர் வைத்துக்கொள் என்று. கேட்டாயா? பொய்யானாலும் வேடிக்கையாக ஸ்குரூலூஸ் என்று பெயர் வைக்கப்போய் இப்பொழுது பார்! நிஜமாகவே ஸ்குரூலூஸ் ஆகிவிட்டாய்" என்று பரிதாபப்பட ஆரம்பித்துவிட்டார் அந்தப் பைத்தியம்! அவருக்கென்ன தெரியும்? நான் ஏன் இவ்வாறு திட்டமிட்டிருக்கிறேன் என்று கூறினேன் என்பது அவருக்குத் தெரியுமா? அல்லது உங்களுக்குத்தான் தெரியுமா? சொன்னால்தானே தெரியும். அதைச் சொல்வதற்குள்ளாகவே எனது நண்பர் பரிதாபப்படலம் ஆரம்பித்து விட்டார். அதுகிடக்கட்டும் காரணம் சொல்லுகிறேன் கேளுங்கள்.

"நம்ம பிரதம மந்திரி ரெட்டியார் காரைக்குடிக்குச் சென்றார் அல்லவா? அங்குபோய் டாக்டர் அழகப்பசெட்டியார் கல்லூரிப் புதிய கட்டிடத்தைத் திறந்து வைக்கும்போது "கல்வியின்மை நாட்டிலிருந்து ஒழிய வேண்டும். அறியாமை அறவே நீக்கப்பட வேண்டும். அதற்காக ஊருக்கு ஒரு பள்ளி வேண்டும்; ஜில்லாவுக்கு ஒரு கல்லூரி வேண்டும். இவ்வித நிலைமை ஏற்பட வருஷம் 46 கோடி ரூபாய் வேண்டும். அதற்கு என்ன செய்வது? சர்க்காரைக் கேட்காதீர்கள். அது சர்க்காரின் சக்திக்கு உட்பட்டதல்ல. ஆகவே ஆங்காங்குள்ள கொடையாளிகள் முன்வர வேண்டும்." என்று குறிப்பிட்டார். இந்தப் பிரசங்கத்திலிருந்து நம் சர்க்கார் உடனடியாக நாட்டிலிருந்து தற்குறித்தனத்தை ஒழிக்க விரும்பவில்லை என்று தெரிகிறதல்லவா? அதாவது பச்சையாகச் சொன்னால் கிராம மக்களின் நலனுக்காக ஆரம்பக் கல்விக்குச் செலவு செய்ய முடியாது என்று கூறிவிட்டதல்லவா?

அது அப்படியாச்சு. பிற்பாடு காரைக்குடி நகரசபையார் பிரதமருக்கு ஒரு வரவேற்பு அளித்தார்கள். அதற்குப் பதிலளிக்கையில் "நகருக்குத் தேவையாயுள்ள ஆஸ்பத்திரி, வடிகால் திட்டத்திற்கு மான்யம், தண்ணீர்த் திட்டத்திற்குக் குழாய் முதலியன கூடியமட்டில் இந்நகரிலேயே நன்கொடைகள் மூலம் பெற்று நடத்தவேண்டும்," என்றுகூறிவிட்டார்.

கிராமமக்களின் தற்குறித்தனத்தை ஒழிக்கவும் சர்க்கார்செலவுசெய்யாமல், நகர சுகாதாரத்துக்கும்சர்க்கார் செலவு செய்யாமல், அவைகளுக்கெல்லாம் அரியதொரு யோசனையை நமது பிரதமர் கூறியதைப் படித்தேன். அதற்குப் பிற்பாடு தான் நாமும் இந்த மாதிரித் திட்டம் ஒன்று தயாரித்து விட்டால் நமது வருமானத்துக்கும் செலவே இருக்காதல்லவா? என்று யோசித்தேன். இதில் தவறு என்ன? யார் ஸ்குரூலூஸ்? கூறுங்கள்!

* *

சகவாச தோஷம்!

"நம் ரெட்டியார் தான் நம்மைவிடப் பெரிய வகுப்புவாதி என்று பார்ப்பனர்கள் வெளிப்படையாகக் கூறிவருகிறார்களே, நாஸ்திகம் பேசும் ராமசாமி நாயக்கராவது பரவாயில்லை. விபூதியும், பொட்டும் போட்டுக்கொண்டு இருக்கும் ராமசாமி ரெட்டியாரின் வகுப்புவாதம் பொறுக்க முடியவில்லை என்றெல்லாம்கூறுகிறார்கள்; பத்திரிகைகளிலும் எழுதுகிறார்கள். அப்படியெல்லாம் இருக்க எதற்காக, சார்! "ராவண காவிய"த்திற்குத் தடை! "விடுதலைக்கு ஜாமீன்! என்றெல்லாம் நம்மீது ரெட்டியார் பாணம் தொடுக்கிறார்?" என்று எனது நண்பர் கேட்கிறார் எனக்கு எழுதிய கடிதத்தில். ஆனால் என்ன அவசரமோ, தெரியவில்லை, தனது விலாசத்தை எழுதாமல் தனது கையெழுத்துப் புரியாத மாதிரியில் போட்டு அனுப்பிவிட்டார். ஆனால் பதிலோ நான் எழுதியாக வேண்டியிருக்கிறது. எனது அருமை நண்பரே! ரெட்டியார் என்னமோ ரொம்ப நல்லவர்தான். என்ன இருந்தாலும் சகவாச தோஷம் ஏற்பட்டுத்தானே தீரும், பாருங்கோ. இப்போ அவருக்கு "அனுமான்" சகவாசம் ஏற்பட்டிருக்கிறது. "ராவண காவியத்தில்" அனுமானைத் திட்டியிருக்கும்; "விடுதலை" சதா அனுமார்களையும், விபீஷணர்களையும் கண்டித்து வருகிறது; இவைகளை யெல்லாம் "அனுமான்" நம் ரெட்டியாரிடம் கூறியிருக்கும். அவருக்கு இஷ்டமில்லா விட்டாலும் "அனுமான்" சொன்னதற்காகவது ஏதாவது செய்யாவிட்டால், "குரங்கு பேன் பார்த்தாலும் பார்க்கும்; மயிரைப் பிய்த்தாலும் பிய்க்கும்" என்பார்களே அதுபோல் வழியில் எங்காவது தொப்பென்று தன்னைப் போட்டுவிட்டால் என்ன செய்வது? என்ற பயத்தினால் தான் இந்த மாதிரி காரியங்கள் செய்கிறார். அதற்காக ரெட்டியார் மீது கோபித்துக் கொள்ளாதீர், தோழரே! வணக்கம்.

திராவிடநாடு பிரிவினை நாள்

பம்பாய். 4—7—48.

1-7-48ல் இரவு 8-30 மணிக்கு தாராவி ரஜபலிசால் 1. நீர் அவ்வையார் இல்லத்தில் திரு எஸ். எ. அப்பாவு அவர்கள் தலைமையின் கீழ் திராவிடநாடு பிரிவினைக் கூட்டம் நடைபெற்றது. தலைவர் திராவிடநாடு பிரிவினையின் அவசியத்தைப்பற்றி எடுத்துக் கூறினார்கள். அதை ஆதரித்துப்பல தோழர்கள் பேசினார்கள் பின்பு பல தோழர்களால் இன்னிசைவிருந்தளிக்கப்பட்டு விருந்துக்குப்பின் 12 மணிக்கு கூட்டம் முடிந்தது.

ரோஜா முத்தையா

புத்தக வியாபாரிகளே!

[✪]

எங்களிடம் உள்ள குடி அரசுப் பதிப்பக வெளியீடுகள், மற்றும் நமது இயக்க வெளியீடுகள் அனைத்தையும் நாடெங்கும் பரப்ப வேண்டும் என்ற நோக்கத்தோடு எல்லா முக்கிய நகரங்களிலும் நமது இயக்கப் புத்தகங்களை விற்பனை செய்ய ஏஜன்சி கொடுக்க ஏற்பாடு செய்து வருகிறோம்.

அதற்காக, நமது "குடிஅரசு", "விடுதலை" ஆபீசில் ஆசிரியராக இருந்து வந்த நம்தோழர் எம். மாணிக்கவாசகம் அவர்கள் நமது பிரதிநிதியாக இந்த மாதம் திருச்சி, தஞ்சாவூர் ஜில்லாக்களில் சுற்றுப்பிரயாணம் செய்து வருகிறார்.

நம்மிடம் ஏஜன்சி எடுத்துக்கொள்ள விரும்பும் புத்தக வியாபாரிகள் முழுவிபரமும் நேரில் அவரிடம் தெரிந்து ஒப்பந்தம் செய்து கொள்ளலாம்.

மானேஜர்

நாதன் கம்பெனி லிமிடெட், ஈரோடு.

குடி அரசு

10—7—48 சனிக்கிழமை.

பெரியாரின் சங்கநாதமும் தொண்டர்களின் பேரெழுச்சியும்.

✪

சென்ற மாதம் 24ம் நாள் திருச்சியில் கூடிய நிர்வாகக்கமிட்டியின் முடிவை வரவேற்று, திராவிடத்தின் பல திசைகளிலிருந்தும் உற்சாகத்தோடு திரண்டெழும் பெரிய முழக்கத்தைக் கேட்டு நாம் உண்மையாகவே பெருமகிழ்ச்சியடைகிறோம்.

பார்ப்பனீய ஆதிக்கத்தில் பட்டுத்தடுமாறும் இன்றையச் சென்னை சர்க்கார், திராவிடர்க்கிழைத்துவரும் பாதகத்தைக்கண்டுசிந்தை நொந்து, "நமக்குள்ளே மறைவாக நாசமடைவதைக் காட்டிலும், நானிலமறிய வெளிப்படையாக நாசமாக்கப்படுவது நல்லதல்லவா?" என்று திராவிட இளைஞர்கள் சீற்றத்துடன் கேட்டனர், அன்று நிர்வாகக்கமிட்டியில்.

"போராட்டம்! போராட்டம்! என்ற உங்களின் பேரொலியைக் கேட்டுப் பொறுங்கள்! பொறுங்கள்!! எனக் கையமர்த்தினேன். இனியும் நான் அவ்வாறு செய்ய நமது சர்க்கார் இடங்கொடுக்கவில்லை! இனிப்போராட்டந்தான் என்று சர்க்கார் சொல்லும்போது நான்தான் என்ன செய்வேன்! எதிர் நடவடிக்கை வேண்டும் என்கிறீர்கள்! எனக்கு ஒன்றும் ஆட்சேபனையில்லை! இனித் தடை செய்யவேண்டும் என்பதும் என் விருப்பமில்லை! இதை நீங்கள் தெளிவாய் அறிந்து கொள்ளுங்கள்! ஆனால் மற்றொன்றை நீங்கள் மறத்தலாகாது! சிறிதாவது நியாயத்திற்குச் செவிசாய்க்கும் வெள்ளையன் ஆட்சி இப்போதில்லை! இப்போது நம்மை ஆளுபவர்கள் அகிம்சாவாதிகளான நம்மவர்கள்! ஜீவகாருண்யம்என்று பெரும் பேச்சாய்ப் பேசிக் கொண்டு "விதையை" கரைத்தே ஆட்டினையும் மாட்டினையும், அதைப்போன்ற மற்றும் பல ஜீவன்களையும் அழித்து யாக வேள்வி நடத்தும் அகிம்சா வாதிகள் நடத்தும் ஆட்சியில் நாம் இருக்கிறோம்! இதை நீங்கள் மறக்கக்கூடாது. இந்த ஆட்சியில் நேரடிநடவடிக்கையென்றால் எந்த இழப்புக்கும், எப்போதும் நீங்கள் தயாராயிருக்கவேண்டும்! தொழிலைக் கருதாமல், தொந்தரவை எண்ணாமல், வாழ்வை மதியாமல், மனைவி மக்களை விலங்கு என்று கொள்ளாமல், ஒழிப்போம் இழிவை! ஒடுக்குவோம் அடக்குமுறையை! வாழ்வோம் மனிதர்களாக! இன்றேல் மடிந்தொழிவோம் வீரர்களாக! என்ற முடிவுக்கு வந்திருப்பவர்கள் எத்தனை பேர்? இதை நான் தெரிந்து கொள்ள எனக்கு ஒரு வாய்ப்பு என்ன?" இவ்வாறு கேட்டார் படைத்தலைவர், தந்தை பெரியார்.

இதற்குப் பிறகுதான், "சர்க்காரின் தடுப்பு முறைகளைச் சமாளிப்பதற்கு அதற்கான திட்டங்களையும், வழி முறைகளையும் வகுத்துக் கொடுக்கவும், உடனடியான நடவடிக்கைகளை எடுக்கவும் தலைவர் பெரியார் அவர்களுக்குச் சகல அதிகாரங்களையும் இக்கமிட்டி அளிக்கின்றது" என்கிற மூன்றாவது தீர்மானம் நிறைவேறியதும், அதையொட்டித் தலைவர் பெரியார் அவர்களே ஒவ்வொரு ஜில்லாவுக்கும் நேரடியாகச் சென்று, ஒவ்வொரு தொண்டர்களையும் நேரில் சந்தித்து, அங்கங்கேயுள்ள சூழ்நிலையைக் குறித்து மனம் விட்டுப் பேசித் தமிழ்நாடெங்கும் சுற்றி வரவேண்டுமென்ற "எழுதப் படாத" தீர்மானம் நிறைவேறியதுமாகும்.

இந்த முடிவுக்கிணங்கத்தான் இந்த மாதம் முதல் நாளன்று சென்னையிலே தமது சங்கநாதத்தை ஆரம்பித்தார்கள் பெரியார் அவர்கள்.

"எனக்கு வயது **70** ஆகி விட்டது. அடுத்த அடி எடுத்துவைக்க வேண்டியது சுடுகாட்டில்தான். அதற்குள் ஒரு கை பார்த்துவிடத்தான் போகிறேன்"

இந்தக் கர்ஜனையைக் கேட்டு எந்த மந்தமதியினர்க்குத்தான் உணர்ச்சி உண்டாகாதொழியும்! "இந்த ஆணவ மந்திரிசபை ஒழிக! கட்டாய இந்தி ஒழிக! என்ற பேரொலியோடு, கூட்டத்திற்கு வந்திருந்த அத்தனை பேரும் "அடக்குமுறை ஆயுதங்களை எதிர்த்தொழிப்போம்" என்று கை தூக்கித் தங்கள் தங்கள் உடன்பாட்டை அறிவித்த கண் கொள்ளாக் காட்சிகள்" எப்படி உண்டாகாமலிருக்கும்?

முதல் முதல் சென்னையில் தொடங்கிய சுற்றுப்பிரயாணம் வடார்க்காடு, கோவை, இராமநாதபுரம், மதுரை, திருநெல்வேலி ஆகிய ஜில்லாக்களில் எல்லாம் இன்றோடு முடிவடைந்திருக்கிறது. எஞ்சிய ஜில்லாக்களிலும் அடுத்த வாரத்தோடு முடிவடையலாம்.

இதுவரை சுற்றுப்பிரயாணஞ் செய்த ஒவ்வொரு ஜில்லாவிலும் 500 பேர், 1000 பேர், 1000க்கு அதிகமான பேர் என்று சொல்

ரோஜா முத்தையா

லத்தக்க வகையில் "எப்பொழுதும் நாங்கள் போராட்டத்திற்குத் தயார்'' என்று பெரியார் அவர்களிடம் நேரில் வந்து உறுதி கூறிய காட்சியையும், "இன்னும் சில நாள்பொறுங்கள்'' என்று படைத்தலைவர் பகர்ந்துவரும் காட்சியையும் கேட்டுக்கேட்டு நாம் பூரிப்படைகிறோம்.

நமக்கு வரும் கடிதங்களைக் குறித்து இங்கு குறிப்பிடாமல் இருக்க முடியவில்லை.

"எதற்காக இந்தக் காலதாமதம்? நம்முடைய வலிமையை நம் தலைவர் அறியமாட்டாரா? இப்பொழுது எதற்காக ஒவ்வொரு ஜில்லாவுக்குமாகச் செல்லவேண்டும்? இந்தத்தள்ளாத வயதில், நெருக்கடியான நேரத்தில் இந்த மாதிரியான ஒரு முயற்சி செய்யத்தான் வேண்டுமா? களத்தைக் குறிப்பிடச் சொல்லுங்கள்! காரியமாற்ற நாங்கள் தயார்! எப்பொழுது? எப்படி? இதுதானே இப்பொழுது வேண்டும்'' என்று துடிதுடிப்போடு எழுதியிருக்கிறார் ஒரு தோழர்.

"நான் ஒரு தொழிலாளி. எனக்கு நான்கு குழந்தைகள் உண்டு. என் மனைவிக்கு இது ஆறாவது மாதம். இருந்தாலும் தாங்கள் நடத்தவிருக்கும் போராட்டத்தில் நான் பங்கு எடுத்துக் கொள்ளுகிறேன்; நான்மட்டுமல்ல என் வாழ்க்கைத் துணைவியும் தான். குழந்தைகளை அதனதன் இயற்கைக்கு விட்டுவிடவேண்டிய தாயிருக்குமே என்பதைப்பற்றி நாங்கள் கவலைப்படவில்லை. எப்பொழுது உங்கள் உத்தரவு? இதைத்தான் நாங்கள் எதிர்பார்க்கிறோம்'' என்று எழுதியிருக்கிறார் இன்னொரு தோழர்.

"அய்யா! முந்திய போராட்டத்திலேயே கலந்துகொண்டவன் நான். இப்பொழுது ஆரம்பிக்கவிருக்கும் போராட்டத்தில் எனக்கும் முதலிடம் தரவேண்டுமெனப் பிரார்த்திக்கிறேன். எக்காரணம் கொண்டும் இதை மறுக்கக் கூடாது'' இவ்வாறு உரிமையை நிலை நாட்டிப் பாத்தியதை கேட்கிறார் இன்னொரு தோழர்.

வந்த கடிதங்களில் இங்கு நாம் இரண்டொன்றைத்தான் குறிப்பிட்டிருக்கின்றோம். சில தோழர்கள் வஞ்சினங்கூறி எழுதி, ரத்தத்திலேயே கையெழுத்திட்டு அனுப்பியிருக்கிறார்கள்.

சுருக்கமாகக் கூறவேண்டுமென்றால், இக் கடிதங்கள் இந் நாட்டு மக்களின் வீரத்திற்கு ஒரு எடுத்துக் காட்டாய், என்றும் அழிவுறாத இலக்கியமாக விளங்கத் தகுந்த பெரும் பொக்கிஷமென்றே கூறவேண்டும்.

ஈவு இரக்கமற்ற, வன்கண்மையும் குரூரமே உருவான இப்போதைய அஹிம்சா மூர்த்திகளின் சுயரூபத்தையும், அவர்களின் அட்டூழியமான அக்கிரமப் போக்கையும் கண்ட பிறகே, பெரியார் அவர்களால் இக்கொடிய சூழ்நிலையை நன்றாக விளக்கிக் கூறப்பட்ட பிறகே இத்தனை ஆயிரம் தோழர்கள் கச்சையை வரிந்து கட்டி எங்கு? எப்பொழுது? எப்படி? என்ற கேள்விகளைப் போட்டு முழக்கஞ் செய்கின்றார்கள் என்பதைக் கேட்கும் போது எந்தத் திராவிடன் தான் மகிழ்ச்சியடையாதிருப்பான்?

வடநாட்டு ஆதிக்கத்தை முறியடிக்க, பார்ப்பனீயச் சுரண்டலைப் படுகுழியில் புதைக்க, முன்னேற்றப்பாதையில் எடுத்து அடிவைத்து நடக்க முடியாத இன இழிவைத் துடைக்க, இந்தத் திராவிட இன உணர்ச்சியுடைய இளைஞர்கள் மட்டுமோ, எத்தனையோ காங்கரஸ் திராவிடத் தோழர்களும் கலந்து அய்க்கியமடையக் காத்திருக்கிறார்கள் என்பதையும் நாம அறிகிறோம்.

திராவிடக் காளைகளின் பேரெழுச்சியைக் கண்ட ஓமந்தூரார் மந்திரி சபை, திராவிடர்களின் மானத்தைப் பறித்து மொட்டையடித்து நாமம் போட்டு கோவிந்தா! கோவிந்தா என்று கூக்குரல்போடச் செய்யும் இக்காரியத்தைக் கைவிடுமா? அல்லது கைவிடாதிருக்குமா? நிதானப் புத்தி இல்லாமல், நேற்றுச் சொல்லியதை இன்று மாற்றிச் சொல்லி, ஒரு மந்திரி சொல்வதை மற்றொரு மந்திரி அது அவர் சொந்த அபிப்பிராயமே தவிர மந்திரி சபையின் கருத்தல்ல என்று மறுத்துப் பேசிவரும், மந்திரிகளடங்கிய மந்திரி சபையிலே நிதானப்போக்கை நாம் எதிர்பார்க்கவில்லை. எதிர்பார்க்கத் தேவையுமில்லை.

"ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதாரே'' என்று ஆண்டவனுக்கும் உலக மக்கள் நிகழ்ச்சிக்கும் தத்துவம் காட்டும் மெய்யன்பர்களின் போக்கை மறுத்து, ஆட்டுவிப்பவன் யார், அவன் எங்கிருந்து கொண்டு எப்படி எதனால் ஆட்டுகின்றான் என்று கேட்கும் எந்தப் பகுத்தறிவுவாதிதான், "ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதாரே'' என்று இப்போதைய மந்திரி சபையைக் குறித்துக் கூறும்போது எப்படி மறுத்துவிட முடியும்? பார்ப்பனர்களும்—பனியாக்களும் ஏவியபடியெல்லாம் ஏவல் கேட்கும் இந்த மந்திரி சபை, இந்த மந்திரி சபை அமைவதற்கு என்ன அடிப்படையோ அந்த அடிப்படை அழிந்தொழிய, இந்த நாட்டு ஆட்சியின் அமைப்பு வேறு எவரின் தலையீடுமற்ற நிலையில் அமைக்கப்பட வேண்டுமென்ற உரிமைப் போராட்டம், மந்திரி சபையின் வெற்றிகரமான பின் வாங்கும் நடத்தையால் சிலநாள் காலதாமதமானால் ஆகுமேதவிர, எப்படியும் போராட்டம் நடந்து தானே தீரும்! நடந்துதானே ஆக வேண்டும்! இந்த உறுதியும் உரமும் பெற்ற உணர்ச்சி வெள்ளத்தைத்தான், திராவிடர்களின் வீர முழக்கப் பேரொலியைக் கேட்டுக் கண்களுள்ள எவரும் காணவேண்டும்.

நிற்க, தொண்டர்களுக்கு இந்த நேரத்தில் நாம் இவைகளைக் கூற வேண்டுமென்று ஆசைப்படுகிறோம்.

இனஇழிவைத் துடைப்போம்! எவர் தடுப்பினும் எதிர்ப்போம்! எப்பொழுது போராட்டம்? இப்போதே நாங்கள் தயார்! என்று தினவெடுக்கும் தோள்களையுடைய செந்தமிழ் வீரர்களே! இப்போராட்டத்தில் எங்கள் பங்கு என்ன குறைச்சலா என்றுமனம் புழுங்கும் தாய்மார்களே! இளைஞர்களே!:—

போராட்ட முறையில் நீங்கள் கைக்கொள்ள வேண்டிய முதல் பாடம் கட்டுப்பாடு. கட்டுப்பாட்டுக் கடங்கிப் போர்த்தலைவன் குறித்த வேளையில், குறித்த இடத்தில், குறிப்பிட்ட காரியத்தைச் செய்ய நீங்கள் ஆயத்தமாயிருக்க வேண்டும்! உங்களுடைய சக்தியைச்சிதறடிக்க பார்ப்பனீயம் பல வலைகளை வீசும்! ஏமாந்து விடாதீர்கள்! எழுச்சியையே ஆயுதமாகக்கொண்டு, வேறு எந்தக் கொலைக் கருவியையும் கைக்கொள்ளாமல் போராட்டதிலீடுபட வேண்டியிருக்கும் உங்களை, தவறான பாதையைக்காட்டி சரிந்து விழுவதற்கு வேண்டிய முயற்சிகளைச் செய்யும் பார்ப்பனீய

அதிகாரவர்க்கம்! அதற்கு ஒத்துழைத்துப் பின்பாட்டுப் பாடி, ஒத்து ஊதி தாளம்போடும் பணக்கார வர்க்கம்' உணர்ச்சிக்கு அடிமைப்பட்டு உழுத்தர்களின் ஏமாற்றத்திற்கு உள்ளாகாதீர்கள்!

உங்களுடைய சக்தியனைத்தும் கட்டுப்பாடாய் ஒருமுகமாக ஒரு முனையிலே செலுத்தப்பட வேண்டும் என்பதைக் கவனத்தில் வையுங்கள்! கட்டுப்பாட்டோடு கூடிய எழுச்சியே, நம் காரியத்தை வெற்றி பெறச்செய்யும் என்பதை நினைவில் வையுங்கள்.

★

அய்யோ நீதிதேவா!

★

உடையார்பாளையம் ஆசிரியர் வேலாயுதம் அவர்களின் உடம்பு ஏழெட்டு மாதங்களுக்கு முன்னால் ஒரு நாள் மரக்கிளையில் உயிரில்லாமல் தொங்கிக் கொண்டிருந்தது. அவரே தற்கொலை செய்து கொண்டார்; அதற்குக் காரணம் அவரின் குடும்ப ஊழல், இதை நாங்கள் கண்டு பிடித்தோம் என்று கூறியது நீதியின் பாதுகாப்புக்குரிய அதிகாரவர்க்கம். இதை முழுப் பொய் என்று கூறி மறுத்து இது, கொலையே, படுகொலையே! கட்சிக் காய்ச்சலே கொலைக்குக் காரணம்! இவ்வக்கிரமத்தைக் கேட்பாரில்லையா? என்று முறையிட்டனர் அவ்வூர்ப் பொதுமக்கள். அதைக் கூட்டம் போட்டு அரசாங்கத்தாருக்கும் அறிவித்தார்கள். பல காங்கரஸ் எம். எல். ஏக்களே முன்னின்று இது அநியாயம்! இதை உடனே அரசாங்கம் விசாரிக்க வேண்டும் என்றெல்லாம் கூட்டங்களில் பேசியும், துண்டுப்பிரசுரம் வெளியிட்டும் மந்திரிகளுக்கும் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். திராவிடர் தினசரி விடுதலையும், இப்பரிதாப நிகழ்ச்சியை அடிக்கடி அமைச்சர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்தது.

அதற்குப் பிறகு தான் அதாவது சுமார் 7 மாதங்களுக்குப் பிறகு தான இந்தப் பார்ப்பனீய ஆதிக்க மந்திரிசபை, விசாரணை என்கிற நாடகமாவது நடந்ததாயிருக்கட்டுமே என்று முடிவு கட்டியது போலும். ஏன் இப்படிக் கூறுகிறோமென்றால், கொலை நடந்த போது இருந்த அதிகாரிகளை வெளியூர்களுக்கு மாற்றி விட்டு வேறு போலீஸ் அதிகாரிகளை ஏற்படுத்தி "இவர்கள் இவ்வுண்மையைக் காண்பார்கள்" என்று 7 மாதத்திற்குப் பிறகு சர்க்கார் நியமித்தார்கள். அவர்கள் சில நாள் விசாரணைக்குப் பிறகு பார்ப்பனர்களும், பணக்காரர்களும், இவ்விருவரின் எடுபிடி ஆட்களுமான 13 பேர் மீது குற்றஞ்சாட்டி 60 சாட்சிகள் உண்டு என்று கூறி வழக்கைப்பதிவு செய்தார்கள். போலீசார் பதிவு செய்த வழக்கை ஒரு கலெக்டர் (பார்ப்பனர்) என்கிற சாதாரண ஜில்லா அதிகாரி, தனக்குள்ள முழு அதிகாரத்தையும் பிரயோகப்படுத்தி, அவ்வழக்கை வாபீஸ் வாங்கிக் கொள்ளச் செய்து விட்டார். இதை வாபீஸ் வாங்குவதற்கு என்ன காரணம்? வாபீஸ் வாங்கியது நியாயந்தானா? என்று நாம் கேட்கவில்லை. ஏன்? யாரைக்கேட்பது?

ஒரு ஜில்லாவின் எல்லைக்குள் ஒரு கொலை நடக்க, அது தற்கொலை என்று உள்ளூர் அதிகாரிகளால் முடிவு கட்டப்பட்டுக், கேள்வி கேட்பாடற்ற நிலையில் போன பிறகு, அது முழுப் பொய் என்று பொது மக்களும் பொது மக்களின் பிரதிநிதிகளும் மறுத்துக் கூவிய கூப்பாட்டுக்குச் செவிசாய்ப்பது உண்மை என்றால், புதிய போலீஸ் அதிகாரிகளை நியமிக்கும் போதே, போலீஸ் அதிகாரிகளுக்குத் தலைவராக இருக்கும் அந்த ஜில்லாவிலுள்ள கலெக்டரையும், வேறு சூப்பிரண்டெண்ட் போன்ற மற்ற அதிகாரிகளையும் சேர்த்து அல்லவா மாற்றியிருக்க வேண்டும்? அவர்களுடைய தலையீடும் இல்லாமல் அல்லவா செய்திருக்க வேண்டும்?

உண்மையிலேயே பிறரால் கொல்லப்பட்ட கொலையாயிருந்தால், அதாவது இப்போதையப் போலீஸ் அதிகாரிகளால் கொண்டு வரப்பட்டிருக்கும் வழக்கு உண்மையாயிருந்தால், முன்பிருந்த போலீஸ் அதிகாரிகள் உண்மையை மறைத்தார்கள் என்பது தானே பொருள். அப்படி அவர்களைக் கொண்டு உண்மையை மறைக்கப்பட்டது என்பது உண்மையாயிருந்தால், அவர்களால் மட்டுமே அது மறைக்கப் பட்டுவிடுமா? அந்த ஜில்லாவிலுள்ள கலெக்டரிலிருந்து அந்த ஊரிலுள்ள சாதாரணப் போலீஸ் கான்ஸ்டபிள் வரை அந்த மறைக்கப்பட்டசெயலுக்கு உடந்தையாகத்தானே இருந்திருக்க வேண்டும்? நீதிபரிபாலிக்கும் நீதிவான்கள் இதை முன்பே எண்ணாமல் போனதேன்? இப்போது கலெக்டர் வாபீஸ் வாங்கிய பிறகு கலெக்டரையும் வேறு ஊருக்கு மாற்றியிருக்கிறார்கள் சர்க்கார்.

புதிதாக நியமிக்கப்பட்டிருக்கும் போலீஸ் அதிகாரிகள் கொண்டு வந்த வழக்கு உண்மையாயிருந்தால், முன்பிருந்த அதிகாரிகள் வேண்டுமென்றே மறைத்துவிட்டார்கள் என்றுதானே சொல்ல வேண்டும்? அல்லது பழைய போலீஸ் அதிகாரிகள் சொல்லியது தான் உண்மையென்றால், இப்போதையப் போலீஸ் அதிகாரிகளால் கொண்டுவரப்பட்டிருக்கும் வழக்கைக் கற்பனை என்றுதானே சொல்ல வேண்டும்? இவ்வழக்கைக் கற்பனை என்று கூறுவதாயிருந்தால் ஒன்று இந்தப் புது அதிகாரிகளுக்குக் குற்றம் சாட்டியிருப்பவர்கள்மீது அவர்களைக் கொண்றொழிக்க வேண்டுமென்கிற அளவுக்கு நீங்காத துவேஷம் காரணமாக இருக்கவேண்டும்; அல்லது இக்கற்பனையைச் சிருஷ்டிக்கத் தக்கவாறு எந்தவகையிலோ பெரும் சுயநலத்திற்கு ஆட்பட்டு விட்டார்கள் என்பது காரணமாக இருக்கவேண்டும், என்கிற இரண்டிலொரு முடிவுக்குத் தானே வரவேண்டும். இரண்டிலொன்றை உண்மையென்றாவது மெய்ப்பிக்குமா இந்த மந்திரிசபை?

போலீசார் கொண்டுவந்த வழக்கு உண்மையாயிருந்தால், போலீசாரால் குறிப்பிடப்பட்ட 13-பேர் மட்டுமே கொலைசெய்வதற்கும் அதற்கு உடந்தையாயிருந்ததற்கும் உள்ளான 'குற்றவாளிகள் என்று நாம் நினைக்கவில்லை. இப்போதைய ஆட்சியிலுள்ள மந்திரி சபைதான் இக்கொலைக்குக் காரணமென்போம்.

ஒரு ஏழை ஆசிரியனை, அவன் எதிர்க்கட்சிலிருக்கிறான், தீவிரமாகத் தன் கட்சிப் பிரசாரத்தைச் செய்கிறான் என்பதற்காக, இப்போது குற்றஞ் சாட்டப்பட்டவர்கள் கலந்தோ, கலவாமலோ அக்கொலை நடத்தப்பட்டதென்றால் அதற்குக் காரணமென்ன? மாற்றுக் கட்சிக்காரர்களை அழிப்பதென்றால், மந்திரிசபை அதற்கு மனமகிழுமே தவிர வேறு நடவடிக்கை எடுப்பதில் அக்கரை காட்டமாட்டாது என்று கொண்ட நம்பிக்கைதானே காரணம் என்று கேட்கிறோம். மதுரையும், சேலமும் நடந்த பிறகு தானே, அவைகளைப் பற்றி மந்திரிசபை அலட்சியமாய் நடந்து கொண்ட பிறகு தானே, யார் கஷ்டத்திற்கும் அக்கிரமத்திற்கும் உள்ளானார்களோ அவர்களையே மந்திரிசபை மிரட்டியதினால் தானே, இக்கொலை பகிரங்கமாக, அதாவது 7 மாதத்திற்குப் பிறகும் 60 சாட்சிகள் கிடைக்கத் தக்க முறையில், பகிரங்கமாக நடந்திருக்க வேண்டும் என்றும் கேட்கிறோம்.

ஆகவே இந்த மந்திரிசபை, நியாயத்திற்குப் பரிந்து குற்ற வாளிகளைத் தண்டித்து, உடந்தையாயிருந்த அதிகாரிகளையும் தண்டித்துவிட வேண்டும் என்று நாம் கேட்கவில்லை. அகிம்சாவாதிகள் உயிர்க்கொலை புரியினும், அதற்குப் பெயர் ஜீவகாருண்யம்தான் என்று பேசுபவர்களின் ஆட்சியில், இதை விசாரிக்க வேண்டுமென்று கேட்பது எப்படி நியாயமான விஷயமாக எடுத்துக்கொள்ளப்பட முடியும்? ஆனால் இந்த வழக்கு 7 மாதத்திற்குப் பிறகு கொண்டு வரப்பட்டு நீதி தேவன் முன் கொண்டு வந்து நிறுத்தப்பட்டதும், அதற்குமுன் நீதிதேவன் வேறு எங்கோ குடிபோய் விட்டதும், 7 மாதத்திற்குப்பிறகு குடி

சென்னைப் பிரதமருக்கு !

வணக்கம்!

சென்னைப் பிரதமர் அவர்கட்கு, திருச்சி தேசியப்பள்ளி மாணவர்களின் சார்பாக எழுதியது.

தங்கள் ஆட்சியில் கவனிக்கப் படவேண்டிய விஷயங்கள் எவ்வளவோ உள்ளன. அவைகளில் முக்கியமாகவும், உடனடியாகவும், அவசரமாகவும், அவசியமாகவும் கவனிக்கப்பட வேண்டியது கல்வி சம்பந்தமானது.

அது சம்பந்தமாகத் தாங்கள் விதித்த திட்டம் வருங்கால மாணவர்களை உருவாக்குமா? அல்லது உருக்குலைக்குமா? என்பதுதான் சந்தேகம்.

ஏனென்றால் இந்த நாட்டில் 100-க்கு 97-பேர் தமிழர்கள். அவர்களில் 100-க்கு 85 பேருக்கு எழுத்து வாசனையே கிடையாது. அப்படி இருக்கும்பொழுது தாங்களோ பள்ளியில் 'இந்தி' மொழியைக் கட்டாயப் பாடமாக்கி விட்டீர்கள். அது பற்றி மிக மிக வருந்துகிறோம். தங்களுடைய தாய்மொழியே தெரியாமல் வாழும் மக்கள் இந்த நாட்டில் ஏராளம். அப்படி இருக்கப் பிறிதொரு மொழியை அவர்கள் மீது திணிப்பது நியாயமா?

ஆனால் பள்ளியில் தமிழை முதன் மொழியாக்கி விட்டதாகப் பலர் அறிய, பார் அறிய, பாராளும் மன்றத்தில் பறைசாற்றினீர்கள். ஆனால் அது எந்த விதத்தில் முதன் மொழியாக்கப் பட்டது என்பது எங்களுக்கு விளங்கவில்லை. ஆங்கிலேயன் ஆட்சியில் எங்கள் தாய்மொழிக்கு எவ்வளவு 'பீரிடுகள்' இருந்ததோ, அதினும் குறைந்த 'பீரிடுகள்' தான் சுதந்தர ஆட்சியில் இருக்கிறது.

மேலும் பள்ளியின் நடவடிக்கையோ மாணவர்களின்மனதைப்புண் படச் செய்யும் நிலையில் இருக்கிறது. அதாவது 80-பையன்களுக்கு மேல் கொண்ட தமிழ் மாணவர்களுக்கு இரண்டு வகுப்புக்கள். ஆனால் அதே பள்ளியில் 40-பேர்களுக்குக் குறைவாக உள்ள சமஸ்கிருத மாணவர்களுக்கும் இரண்டு வகுப்புக்கள். இது நியாயமா? நேர்மையா? நீதியா? இதுதான் தமிழ்மொழியை முதன் மொழியாக்கியதன் பலனா? அனாவசியமான வீண் பணச் செலவுதானே இது?

மேலும் விஞ்ஞான காலம் என்று கூறுகிறார்கள். வினாடிக்கு வினாடி விஞ்ஞானம் முன்னேறிக் கொண்டு செல்லுகிறது. அப்படி இருக்க எங்கள் பாடப் புத்தகங்களில் பிள்ளைக் கறி கேட்ட புராணங்களைப்பாடமாக வைத்துப் படிக்கச் செய்கிறீர்கள். இப்படிப்புளங்கள்வாழ்க்கைக்கும், நாட்டிற்கும் ஏதாவது பயன்படுமா? புத்தகமே புராணமயமாக இருக்கிறது. சந்தேகமிருந்தால் இந்த ஆண்டு எஸ். எஸ். எல். சி. பாடப்புத்தகத்தை வாங்கிப்பாருங்கள்.

முதன் மொழியாக்கிவிட்டேன் என்று கூறிக்கொண்டு, மொழிப்பாடங்களை அதிகமாக்கி,நேரத்தைக் குறைத்து எங்களை இன்னலுக்குள்ளாக்குகிறீர்கள். போதிய காலம் இல்லாததினால், ஆசிரியராலும் பாடம் நடத்த முடியவில்லை. இந்த நிலையில் தாய்மொழியில் 'மார்க்கு' வாங்க வாய்ப்பில்லாமல் தவிக்கும் வேளையில் "தாய்மொழிப் பற்று" இல்லை என்று கூறி விடுகிறார்கள்.

தமிழாசிரியர்களோ தங்களுக்குப் போதிய சம்பளம் இல்லையென்று "துக்கவாரவிழா" கொண்டாடுகிறார்கள். இந்நிலையில் தாங்கள் பள்ளிகளில் இந்தியைக் கட்டாயப் பாடமாக்கிவிட்டீர்கள்.

100-க்கு 90 தற்குறிகளாக உள்ள இந்த நாட்டிற்கு இந்தி அவசியமா? என்பதைச் சிந்தித்துப் பாருங்கள் அய்யா! இந்தி கற்றுக்கொடுக்க 2000 ஆசிரியர்கள் தேவை என்று கூறுகிறீர்கள். 2000 ஆசிரியர்களுக்கு ஆண்டு ஒன்றுக்கு 2 லட்சம் ரூபாய் செலவாகுமே! அந்தப்பணம் எதிலிருந்து கொடுக்க ஏற்பாடு செய்திருக்கிறீர்கள். பொதுமக்களுடைய பணம் தானே அது. அவர்களுடைய தாய்மொழியைப்பயில, ஆரம்பக்கல்விக்குப் போதிய பொருள் இல்லையென்று சொல்லிக்கொண்டு, அந்நிய மொழிக்கு அவர்களுடைய அவ்வளவு பணத்தை ஒதுக்குவது, நியாயமா? தர்மமா? இம்மாதிரி செய்வது தான் நேர்மையான ஆட்சியாகுமா?

அப்படியேதான் வைத்துக் கொண்டாலும் படித்துப்பட்டம் பெற்று வடநாடு செல்லும் மாணவர்கள் எத்தனைபேர்? தாங்கள் அனுபவத்தில் அறியாததா இது? இது மாணவர்களை மண்ணோடு மண்ணாக்குவதா? அல்லது மண்டாதிபதிகளாக்குவதா?

ஆங்கிலத்தை அழித்து விடுவதாக கங்கணம் கட்டிக்கொண்டிருக்கும் தாங்கள், அன்னிய நாட்டுடன் தொடர்பு வைத்துக்கொண்டிருப்பது எதற்காக? அப்படி ஆங்கிலத்தைப் பள்ளிகளில் ஒழித்து விட்டால் அன்னிய நாட்டிற்குப் பிரதிநிதியாகச் செல்லும் ஆள் யார்? அல்லது தங்கள் திட்டப்படி இந்தியைக் கற்றுக்கொண்டதினால் இங்கிலாந்து, அமெரிக்கா இரஷ்யா போன்ற நாடுகளின் அரசியலை அறிந்து வர முடியுமா?

—100க்கு 90 பேர் தற்குறிகளாக உள்ள எங்கள் பெற்றோர்களிடம் நாங்கள் ஆங்கிலத்தைக் கற்றுக் கொள்ளத்தான் முடியுமா? இது அன்று முதல் இன்றுவரை (அலெக்ஸாண்டர் முதல், ஆங்கிலேயன் வரை) நாட்டைக் காட்டிக்கொடுத்த நாடோடிக் கூட்டத்தின் சூழ்ச்சி என்பதை தாங்கள் அறியவில்லையா? மேலும் ஆங்கிலம் கட்டாயப் பாடமாக இருந்ததால் தமிழுக்கு இந்த சீரழிவு என்று இவ்வளவு காலம் கூறி வந்தீர்கள். இப்பொழுது இந்தி கட்டாயப் பாடமாக்கப்பட்டதினால் தமிழ்தானாகவே வளரும் என்பது எண்ணமா?

வந்த நீதி தேவன் காலை இன்னொரு பெருந்தேவன் வாரிவிட்டுத் தலைகீழாய் விழுமாறு செய்து விட்டதும், அந்தப் பெருந்தேவனை "அப்படிக் காலை வாரி விடாதீர்" என்று கெஞ்சிக்கூத்தாடி "சற்று அப்பால் விலகியிரும்" என்று பணிவோடு குட்டித் தேவதைகள் சார்பில் கேட்டுக்கொள்ளப்பட்டு, அவ்வாறே நடந்திருப்பதும் ஆகிய "இந்தத் திருவிளையாடல்களை" யெல்லாம் சேர்த்து எண்ணுகிற பொது மக்களே! உண்மைக் குற்றவாளிகள் தண்டிக்கப்படுவார்களா? உடந்தையாயிருந்த உலுத்தர்கள் தண்டிக்கப்படுவார்களா? எப்படியும் உண்மை வெளியாகுமா? அய்யோ! நீதி தேவா! உன் கதி இப்படியா என்ற நிலைமை மாற்றியமைக்கப்படுமா? என்றுதான் நாம் உங்களைக் கேட்கிறோம்.

இவைகளையெல்லாம் தாங்கள் நன்கு சிந்தித்துப் பாருங்கள்.

சென்னை மாகாணத்து முதல் அமைச்சர் என்றால், சென்னை மாகாணத்தில் உள்ள அனைவருக்குந்தான் முதல் அமைச்சர். ஆகவே தாங்கள் ஒரு கட்சிக்கு மட்டும் சொந்தமல்ல. அல்லது ஒரு கூட்டத்தாரின் நலனை மட்டும் நாடுபவர் அல்ல. தற்பொழுது கிழ்வங்காளத்தில் பாகிஸ்தான் மொழியை (உருது) கட்டாயமாக்கியதன் விளைவு தாங்கள் அறியாததா!

ஏன்! இராஜகோபாலாச்சாரியார் இந்தியைக் கட்டாயப்பாடமாக்கியதனால் அவர் பட்ட அவஸ்தை தாங்கள் அறியாததா?

தமிழ் உணர்ச்சி மக்களிடம் அவ்வளவு அதிகம் இல்லாத அக்காலத்திலேயே சிறைக்கோட்டம் புகுந்தோர் 1271 பேர் என்பதைத் தாங்கள் மறந்துவிட்டீர்களா?

ஆகவே நன்கு சிந்தித்து ஒரு முடிவுக்கு வாருங்கள். காலம் கடந்துவிடவில்லை. இந்தி இந்த நாட்டிற்கு வரக்கூடாது என்று பிரச்சாரம் செய்பவருள் தாங்கள் முதல்வராகக் கிளம்ப வேண்டும் என்பது எங்கள் ஆசை.

'இல்லை நாங்கள் வைத்தது தான் சட்டம்' என்றால் அதனால் வரக்கூடியதைத் தடுக்க முன் எச்சரிக்கையுடன் இருங்கள்.

தாங்கள் படித்திருக்கலாம் ரஷ்யா, அமெரிக்கா, பிரான்ஸ் போன்ற நாடுகளில் இளைஞர்களது இரத்தம் ஆறெனப் பெருக்கெடுத்தது என்று. அந்தக் கோரக் காட்சியை, இரத்த வெள்ளத்தை, பிணக்குவியலைத் தாங்கள் நேரில் பார்க்க விரும்பினால் இந்தியைத் தமிழ் நாட்டில் கட்டாயப் பாடமாகப் புகுத்துங்கள்.

வருங்காலச் சரித்திரத்தில் ஆயிரக்கணக்கான மாணவர்கள் மாண்டனர் என்று எழுதவேண்டும் என்று விரும்பினால் இந்தியைக் கட்டாயப் பாடமாக்குங்கள்.

அகிம்சையே தங்கள் ஆயுதமெனக்கொண்ட கட்சியார் ஆண்ட காலத்தில் ஆயிரக்கணக்கான மாணவ மாணவிகள் சிறையில் சித்திரவதைப்பட்டனர் என்று சரித்திரம் கூறவேண்டும் என்று விரும்பினால் இந்தியைப் புகுத்துங்கள்.

அன்பே வடிவமான உலக உத்தமர் காந்திமகான் வாழ்ந்த நாட்டில், உலகத்தை உருவாக்கும் மாணவ மாணவிகளை உருக்குலைத்தது உங்கள் ஆட்சி என்று அந்நியன் எள்ளி நகையாடவேண்டும் என்றும் விரும்பினால் இந்தியைக் கட்டாயப் பாடமாக்குங்கள் இந்த நாட்டில். கடிதம் நீண்டுவிட்டது. சுடுசொல் இருந்தால் மன்னிக்கவும்.

"தமிழ்ப்பித்தன்"

(6ம் பக்கத் தொடர்ச்சி)

தனம்.

'மூப்பு என்றால் என்ன? எப்படி வருகிறது? ஏன் வருகிறது?' என்ற ஆராய்ச்சிக்குக் கூட அவர்கள் இன்று பதில் கண்டு பிடித்து விட்டனர்.

டாக்டர் பிலிப்குட்ஹார்ட் என்ற கொலம்பியா வாசி, 'மூப்பு என்பது ஒரு வியாதி' என்று கூறினார். இவருக்குமுன்பு பலர் இதை எடுத்துக்கூறி இருக்கின்றனர். ஆனால் அதை நிரூபணம் செய்வதில் குட்ஹார்ட் இறங்கி விட்டார்.

பாஸல் கேங்கலியா என்ற சிறு நரம்பு கிருமிப்பைகள் மனிதன் மூளையின் நடுவில் இருக்கின்றன. இந்த கிருமிப்பைகள், இரத்த ஓட்டம், இதயதுடிப்பு, ஜீரணம், உணர்ச்சி எழுப்பல் முதலிய பல செயலுக்கு காரணகர்த்தா. இந்த கிருமிப்பை பாழடைந்தால், அல்லது பழுது ஏற்பட்டால் மூப்பு என்னும்நோய் மனிதனை அணுகுகின்றது. பெரும்பாலும் இவைகள் வயது தளர்ந்தவர்களுக்கே ஏற்படுவது இயற்கை. இளமையிலேகூட இக்கிருமிப்பைகள் பாதிக்கப்பட்டால் மூப்பு—கிழடு ஏற்படுவதுண்டு. இதை நிரூபணம் செய்வதுபோல், என்சபிலிடீஸ் என்ற கொள்ளை நோயில் அவதியுற்றுப் பிழைத்த ஒரு மாதின் மூளையின், மத்தியிலுள்ள இக்கிருமிப்பைகள் பழுதுப்பட்டதால், (அவள் கிழவியாக மாறி விட்டாளாம்.) மூப்பு என்னும் நோய் அவளை அணுகியதாம். இதே போன்று வேறு இரு இட நிகழ்ச்சி நிரூபிக்கின்றனவாம்.

'சாகாவரம் தாரும்'என்பது பண்டை நாள் தொட்டு இன்று வரை கேலிக்கூத்தாகவே நம் நாட்டில் இருக்கிறது, ஆண்டவனை வேண்டி வேண்டி. ஆனால் மேனாடுகளில் சாகா (வரம்) நிலை கிடைக்க என்ன வழி என்று கண்டுபிடிக்க ஆரம்பித்து விட்டனர், ஆண்டவனை நாடியல்ல, அறிவைத் துணை கொண்டு.

பாஸல் கேங்கலியா என்னும் இந்த நரம்புக் கிருமிப்பைகள் பழுது ஏற்படாமல் காப்பாற்றப் பட்டால், மூப்பு நோய் நொடியின்றி, ஆண்டவனருளுமின்றி வரம்பற்ற நெடு நாள் உயிர் வாழலாம், என்று டாக்டர் பிலிப்குட்ஹார்ட் கூறுகிறார்.

அறிவியக்கத்துப்பயனாய் அமரத்துவம் பெறமுயற்சி அங்கே. இங்கே அனந்தசயனனுக்கு அர்ச்சகன் பூஜை. அங்கே ஆராய்ச்சியால் மூப்பொழிக்கும் வேலை. 'நம்மாலாவது ஒன்றுமில்லை, எல்லாம் ஆண்டவன் செயல்' என்ற பேச்சு இங்கே. இருபதாம் நூற்றாண்டில் அங்கெல்லாம் அறிவு மலர்ந்ததை—ஆராய்ச்சி வளர்ந்ததை அறிந்த நம்நாடு இந்நிலையில் இருத்தல் தகுமா? இருக்கலாமா? கூறுங்கள் தோழர்களே!

"மா. சூ. நெடுஞ்சேரலாதன்."

திருமணம்.

மஞ்சக் குப்பம் (கடலூர்) வேணுகோபாலபுரம்தெரு தோழர் நா. வரதராசுலு அவர்கள் இல்லத்தில் ஆனித் திங்கள் 29ம் நாள் காலை 9-மணிக்கு தோழர்களான தம்பையா—வத்சலா திருமணம் நடைபெறும். தோழர்களான வாணிதாசன், ஜெகசிற்பியன் சொற்பொழிவாற்றுவார்கள்.

எமது தீர்ப்பு!

வாழ்விலோர் திருநாள்.

எழுதியவர்: கெ. பாலையா.

விலை அணா 4.

கிடைக்குமிடம்:—

நாதன் கம்பெனி, ஈரோடு

எழுத்துத் திறமைக்கு எடுத்துக்காட்டு, தான்கண்ட காட்சியை, அனுபவித்த அனுபவத்தைப் படிப்பவர்களும் காணவும், அனுபவிக்கவும் ஏற்ற வகையில் எழுத்தாளன் எழுதுவதே. கண்டதைக் காணச் செய்தல் என்பதை ஒரு அரிய பெரிய கலையென்றேகூறி விடலாம். இத்துறையில் கன்னி எழுத்தாளராகிய நண்பர், துணிச்சலோடும் அக்கரையோடும் இறங்கி, திராவிடர் திருநாளாகிய தூத்துக்குடி மாநாட்டைக் குறித்து இச்சிறு நூலில் விளக்குகிறார். ஆசிரியருக்கு இது முதல் முயற்சி என்பதை எண்ணும் போது இதை அவருக்கு ஒரு பெரிய வெற்றி யென்றே கூறிவிடலாம். தூத்துக்குடி மாநாட்டைக் காணாதவர்கள்கட்டாயம்இதைப்படிக்கவேண்டும்.

[தொடர்ச்சி 4ம் பக்கம்]

பால், இளநீர், தயிர், தேன் முதலியவைகளெல்லாம் ஒன்று சேர்ந்து மிகவும் ஆபாசமாகவிருக்கும். அதனைத்தான் பக்தியுள்ள மக்கள் ஆவலுடன் வாங்கியருந்துகின்றார்கள். இதனால் உண்டாகும் நோய்கள் எண்ணிலடங்கா.

ஆகவே இத்தகைய தீமைகளுக்கு உறைவிடமாகிய கோவில் திருவிழாக்கள் ஆகியவைகளால் ஒரு சிலருக்குத் தற்கால சாந்தியாக வேலை கிடைக்கின்றதென்றாலும் எத்தனையோ ஆயிரம் மக்களை வேலையில்லாது திண்டாடச் செய்வதும், எத்தனையோ மக்களை அறிவிழக்கச் செய்வதும், சோம்பேறிகளாக்குவதும், பகற்கொள்ளையடிக்கச் செய்வதுமாகிய காரியங்களுடன் பெருந்தொகையான பொருள்களும் வீணாக்கப்பட்டு வருகின்றனவென்பது நன்றாக விளங்குகின்றது.

இத்தகைய கோவில்களுக்குச் செலவிடும் தோழர்கள் அப்பொருளை மக்களுக்குப் பயன்படக்கூடிய வேறு நல்ல துறையிற் செலவழித்தால், எத்தனையோ மக்களுக்கு வேலை கிடைப்பதோடு, மக்களுக்கே பெருநன்மையுண்டாகும். தற்காலத்தில் மக்களுக்கு இன்றியமையாதனவாயிருப்பது கல்வியே. ஆகையால் பழைய இருட்டுக் கோவில்களுக்கு வீணாகச் செலவழிக்காது, அறிவொளி உண்டாக்குதற்கு வேண்டிய கல்விச் சாலைகள் உண்டாக்கி, அதன் மூலம் மக்களுக்கு நல்லறிவை உண்டாக்குவாரானால் இதனைவிடச் சிறந்த செய்கை வேறொன்றுமில்லை. இவ்வாறு மக்களுக்கு அறிவை வளர்ப்பவர்கள் உலகையே வளர்ப்பவர்கள் ஆவார்கள்.

(5ம் பக்கத் தொடர்ச்சி)

தற்காக லண்டனிலிருந்து நிதி நிபுணர் ரெய்ஸ்மென் வந்திருக்கிறார். இந்தப்பேச்சு வார்த்தையில் தான் கலந்துகொள்ளத் தயாரில்லை, யென்கிறது பாகிஸ்தான்.

அஹிம்சா மூர்த்தியான காந்தியாரின் முக்கிய சீடர்களில் ஒருவராகிய அய்க்கிய மாகாண முதன் மந்திரி பந்த் அவர்களோ இங்குள்ள முஸ்லிம்களை மிரட்டுகிறார் :—

''பாக்கிஸ்தானுக்கும் ஹிந்துஸ்தானுக்கும் போர் ஏற்படுமேயானால் நீங்கள் பாகிஸ்தானுக்கு எதிராகப் போரிடவேண்டும். ஹிந்துஸ்தானுக்காக எந்தத் தியாகமும் செய்யத் தயாராயிருக்க வேண்டும்''

என்று முஸ்லிம்களைப் பார்த்துக் கூறுகிறார்.

ஹிந்து மகாசபையின் காரியதரிசியோ,

''இங்குள்ள முஸ்லிம்களை நம்பக் கூடாது; அவர்களுக்கு அதிகமான சலுகைகள் காட்டக் கூடாது; முக்கிய உத்தியோகங்களில் அவர்களை அமர்த்தக் கூடாது''

என்று கூறுகிறார்.

எனவே, பாகிஸ்தான் மீது போர் தொடுப்பதற்கு வேண்டிய முயற்சிகள் வெளிப்படையாகவே நடைபெறுகின்றன என்பதைக் காண்கிறோம்.

பாகிஸ்தான் மண்ணாசை பிடித்துத் திரிகின்றது, என்று கூறப்படுவது உண்மையாயிருக்குமேயானால் சமாதானத்தை விரும்பும் எவரும் அதைக் கண்டிக்காமலிருக்க முடியாது. இந்தியாவில் மீண்டும் முஸ்லிம் ஆட்சியை நிறுவவேண்டும் என்ற பேராசை பாகிஸ்தான் தலைவர்களில் எவருக்காவது இருக்குமேயானால், ஹிட்லர் ஆசையின் கதியேதான் ஏற்படும் என்பதை நினைவூட்டுகிறோம். அதே போல், ஹிந்துஸ்தான் தலைவர்களும் தங்கள் ஆரிய ஆட்சியை—ராமராஜ்யத்தை—நாடெங்கும் நிறுவிவிட முடியும் என்று நினைக்கக் கூடாது.

திராவிட நாட்டைப் பொறுத்த மட்டில் ஹிந்துஸ்தானின் ஆதிக்கத்திற்காகவோ, திராவிடர்களைக் கசக்கிப் பிழிந்து வரும் வடநாட்டு முதலாளி பூதத்தின் நிரந்தர சர்வாதிகாரத்திற்காகவோ, எந்தத் திராவிடனும் ஒரு சொட்டு இரத்தம் சிந்தக்கூட, ஏன், வியர்வையைச் சொட்டக்கூட, தயாராயில்லை.

ஹிந்துஸ்தான்—பாகிஸ்தான் போர் ஏற்படுமேயானால் திராவிடர் எவரும் அதில் கலந்துகொள்ளவேமாட்டார்கள். அதுவே நல்லதருணம் என்பதை அறிந்து, தனி ஆட்சியை நிறுவிக் கொண்டாலும் கொள்வார்களே தவிர, தங்களுக்குச் சம்பந்தமற்ற போராட்டத்தில் தலையிடமாட்டார்கள்.

பாகிஸ்தான்-ஹிந்துஸ்தான் சச்சரவு.

(2)

மதங்கள் யாவும் அரசாங்கத்தின் துணையினாலேயே பரவியிருக்கின்றன என்றும், எந்த மதமும் தன் சொந்த யோக்கியதையினால் மட்டுமே பரவியதில்லை என்றும், இனியாவது இந்தியாவிலுள்ள ஆட்சியாளர்கள் மத ஸ்தாபனங்களுக்குத் தனிச்சலுகை காட்டக்கூடாது என்றும், அவைகளுக்கு வருமானவரி, முனிசிபல்வரி முதலிய வரிகளை விதிக்க வேண்டுமென்றும், பலாத்காரத்தை அடிப்படையாகக் கொண்ட தனிப்பட்ட படைகள் மீது தடையுத்தரவு பிறப்பித்திருப்பது வரவேற்கத்தக்கது என்றும், மதவெறியை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு நிறுவப்பட்டிருக்கும் சகல தனிப்பட்ட ஸ்தாபனங்களையும் சட்ட விரோதமாக்கியிருப்பது போற்றற்குரியது என்றும், இரண்டாவது கட்டுரையில் குறிப்பிட்டிருந்தோம்.

மதவெறி என்பது எவ்வளவு அறிவு பெற்ற மக்களையுங்கூட காட்டுமிராண்டிகளாக்கி விடுகிறது என்பதற்கு 100-க்கு 100 படித்திருக்கும் பார்ப்பன ஜாதியில் பிறந்து பத்திரிகாசிரியராகவுமுள்ள கோட்ஸே மட்டுமல்ல; இன்னும் எத்தனையோ பேர்களை எடுத்துக் காட்டாகக் கூறலாம். 16—17-வது நூற்றாண்டுகளில் அய்ரோப்பாவிலும், பிரிட்டனிலும் ஒரே மதத்தைச் சேர்ந்த இருபிரிவினர்களாகிய கத்தோலிக்கரும் பிராடஸ்டெண்ட்களும் ஒருவரையொருவர் வெட்டிச் சாய்த்துக் கொள்ளவில்லையா? அவர்களெல்லாம் தற்குறிகளல்லர். கோட்ஸேயைவிட அதிகமாகப் படித்தவர்களே யாவர். 1572-ம் ஆண்டில் ஒரே நாளில் 10,000 (பத்தாயிரம்) ப்ராடெஸ்டண்ட் கிருஸ்தவர்களை கத்தோலிக்கர் படுகொலை செய்தனர். அந்தச் ''சிறந்த நாளை''க் கொண்டாடுவதற்காக 13-வது போப் கிரிகரி என்ற போப்பாண்டவர் நினைவு மெடல்களைச் செய்தனராம்.

ஆகவே, மதவெறி பிடித்தால் எப்போப்பட்ட அறிஞனும் வெறியனாக் மாறிவிடுகிறான். மனித சமுதாயத்தையே மறந்துவிடுகிறான். மிருக மனம் பெற்றுவிடுகிறான்.

காந்தியாரின் படுகொலை நிகழ்ச்சியையே எடுத்துக் கொள்வோம். கொலை செய்தவன் ஹிந்து மதத்தைச் சேர்ந்தவன். காந்தியாரும் ஹிந்து மதத்திற்காகவே தமது வாழ்நாள் முழுவதும் பாடுபட்டு வந்தார். ஆனால் முஸ்லிம்களைத் தாழ்மையாக நினைக்கக் கூடாது, அவர்களைத் துன்புறுத்தக் கூடாது என்று சொல்லி வந்தவர். இதில் என்ன தவறு? காந்தியாருடைய ஹிந்து மதப்பிரச்சாரத்தின் பயனாக பார்ப்பனர்களுக்கு முன்பிருந்த செல்வாக்கு சிறிது சிறிதாகக் குறைந்து வந்தது என்பது உண்மை. தீண்டாமை ஒழிய வேண்டுமென்பதிலும், ''கோவில்களை விபசார விடுதிகள்'' என்று கூறியதிலும், வைதீகப் பிராமணர்களுக்குக் காந்தியார் மீது வெகுநாளாகவே ஆத்திரம் இருந்து வந்தது. காந்தியாரின் ஹிந்து மதத்தில் வைதீகத்திற்கும் பிராமணீயத்திற்கும் செல்வாக்கு இருக்காது என்பதைப் படித்த பார்ப்பனர் நன்றாக உணர்ந்திருந்தனர். ஸ்ரீரங்கம் கோவில் நுழைவு முயற்சியின்போது டாக்டர் ராஜனின் கண்களில் வைதீகர்கள் மிளகாய்ப் பொடியைத் தூவியதை இந்தச் சந்தர்ப்பத்தில் நினைவூட்ட விரும்புகிறோம். காந்தியார் ஹிந்து மதத்திற்காகவே பாடுபட்டு வந்துங்கூட ஹிந்து மகாசபை என்றும், வர்ணாசிரமசபை என்றும், பிராமண பாதுகாப்புச் சங்கம் என்றும் தனித்தனியே ஏற்பட்டதிலிருந்தே பிராமணர்களுக்குக் காந்தியாரின்போக்கு அர்த்தாங்கத்தில் ஏட்

ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

டிக்காயாக இருந்து வந்தது என்பது விளங்கவில்லையா?

இந்த மனக்கசப்பின் விளைவுதான் ஜனவரி 30-தேதி நடைபெற்ற கோரக் கொலை.

காந்தியாரைக் கொன்றவன் ஒரு மராத்திப் பார்ப்பனன். இந்த உண்மையை இந்த நாட்டுப் பத்திரிகைகளில் இரண்டொன்றைத் தவிர மற்றவை வெளியிட்டனவா? வேறு ஒரு மதத்தைச் சேர்ந்தவனோ, அல்லது ஜாதியைச் சேர்ந்தவனோ காந்தியாரைக் கொன்றிருந்தால் நாட்டில் எவ்வளவு பெரிய கொந்தளிப்பு ஏற்பட்டிருக்கும்? வாசகர்கள் தயவு செய்து நிதானமாக யோசித்துப் பார்க்க வேண்டுகிறோம். தனி ஒரு மனிதன் பேய்த்தனமாக நடந்ததற்காக அந்த சமூகத்தையே வெறுக்க வேண்டும் என்று நாம் கூறவில்லை. ஆனால் ஒரு விஷயத்தை மட்டும் ஆட்சியாளருக்கும் பொது மக்களுக்கும் நினைவூட்ட விரும்புகிறோம்.

காந்தியாரைக் கொலை செய்தவனுடைய சமூகம் தற்குறிச் சமூகமல்ல. அவனும் ஒரு தற்குறியல்ல. அவன் சம்பந்தப்பட்டிருக்கும் ராஷ்ட்ரிய சேவா சங்கத்திலும் இந்து மகாசபையிலும் பார்ப்பனர்களே 100க்கு 99பேர் இருந்திருக்கின்றனர். ஏதோ ஏமாற்றுக்காக மட்டும் மற்ற ஜாதியார்களில் இரண்டொருவரைச் சேர்த்துக் கொண்டிருக்கிறார்களே ஒழிய, மற்றபடி இரு சங்கங்களும் அவர்களின் முழு ஆதிக்கத்திலேயே இருந்திருக்கின்றன. டாக்டர்கள், வக்கீல்கள், சர்க்கார் மேல் உத்தியோகஸ்தர்கள், பேராசிரியர்கள், பிரின்ஸ்பால்கள் போன்ற பொறுப்புள்ள பார்ப்பனர்களே சந்தேகத்தின் மீது கைது செய்யப்பட்டிருக்கின்றனர். படைப்பயிற்சிக்காக ஒவ்வொரு சிற ஊரிலும்கூட வடநாட்டான் இருந்திருக்கிறான். துப்பாக்கியால் சுடுவது, கைக்குண்டை எறிவது, கத்தியால் குத்துவது போன்ற பயிற்சிகள் கூட அளிக்கப்பட்டிருக்கின்றன.

இவ்வளவும் இந்தியா முழுவதும் சங்கிலித் தொடர்போல நடந்து வந்திருக்கிறது. ஆயினும் 30ந் தேதி வரையில் ஆட்சியாளருக்கு கடுகளவாவது தெரிந்ததா? இதிலிருந்து காந்தியாரைக் கொல்வது மட்டுமல்ல! தங்கள் மதவெறிக்கு ஒத்துவராதவர் யாராயிருந்தாலும் அவர்களை யெல்லாம் ஒழித்துக் கட்டிவிட வேண்டும் என்ற திட்டத்தின் மீதுதானே இவ்வளவும் நடைபெற்று வந்திருக்கிறது?

இல்லாவிட்டால் வடநாட்டில் பொதுமக்கள் பிராமணர்கள் மீது மட்டும் அதிதீவிர ஆத்திரத்துடன் நடந்திருப்பது ஏன்? மிராஜ் சமஸ்தானத்தில் ரயில் வண்டி நிறுத்தப்பட்டு பிராமண பிரயாணிகள் மட்டும் தாக்கப்பட்டிருக்கின்றனர். 'டாடார்' என்ற இடத்தில் பிராமணர் கடைகள் தீக்கிரையாக்கப்பட்டிருக்கின்றன. மஹாராஷ்டிரப் பிராமணர்கள் பொதுமக்களால் தாக்கப்படுவதைப்பற்றி சர்தார் பட்டேலே ஓலமிட்டிருக்கிறார். இது ஏன்? இந்த சமுதாயம் ஒரே கட்டுப்பாடாக சதி வேலையிலும், பலாத்காரச் செயலிலும் இறங்கியிருக்கிறது என்பது விளங்கவில்லையா?

"கோட்ஸே ஒரு பத்திரிகாசிரியர் என்பதற்காக எல்லா பத்திரிகாசிரியர்களையும் துன்புறுத்தலாமா?" என்று கேட்கிறார், கிருஷ்ணராவ் என்ற பம்பாய் பார்ப்பனர், "டைமஸ் ஆப் இந்தியா" என்ற பத்திரிகையில்.

பத்திரிகாசிரியர்கள் யாவரும் சேர்ந்து பலாத்காரப் பயிற்சி செய்து, சதியும் செய்ததாக மெய்ப்பிக்கப்படுமேயானால் நிச்சயம் எல்லோரையும் கைது செய்யத்தான் வேண்டும். பிராமண சமுதாயமே இவ்வாறான சதி வேலையில் தொடர்பு வைத்திருக்கிறது என்று ஏற்படும்போது, அந்த சமுதாயத்தின் மீதே ஆட்சியாளர் நடவடிக்கை எடுத்துத்தான் தீரவேண்டும். இல்லாத வரையில் அந்த சர்க்கார் சோர்மையற்றது, நெஞ்சு உரமற்றது என்றுதானே பொருள்?

இவ்வளவு அசைக்க முடியாத ருசுக்கள் இருந்துங்கூட இம்மாகாணத்தில் காந்தியாருக்காக முதலைக் கண்ணீர் விடுவதும், ராமபஜனை செய்வதும், ஊர்வலம் வருவதும், காந்தியாரைக் கொன்றவன் பார்ப்பனன் என்பதை அடியோடு அழுத்தியிருப்பதும் எவ்வளவு அயோக்கியத்தனமான செய்கை என்பதைப் பொதுமக்களே முடிவு செய்து கொள்ளட்டும்.

அதுமட்டுமல்ல. சங்கராச்சாரியார் முதல் இந்து மகாசபைத் தலைமைப் பார்ப்பான்வரையில், ஆர். எஸ். எஸ் காரப் பார்ப்பான் முதல் பஞ்சாங்கப் பார்ப்பான் வரையில்—காந்தியாரின் பரம விரோதிகளான எல்லாப் பார்ப்பனரும், காந்தியாரின் மரணத்திற்காகத் துயரப்படுவதாகப் பாசாங்கு செய்து கொண்டு, கொள்கை வேற்றுமைகளை மறந்து மனிதத் தன்மை உணர்ச்சியினால் உந்தப்பட்டு காந்தியாரின் படுகொலைக்காக மனம் பதறும் திராவிடர்களைப் பார்த்துக் கிண்டல் செய்கிறார்கள் என்றால், இதைவிட ஈனத்தனமான பித்தலாட்டச் செய்கை இந்த உலகிலேயெ எங்கும் காணமுடியாது என்றே கூறுவோம்.

எனவே, மதவெறியும், ஜாதிவெறியும் பூண்டோடு அழிக்கப்பட்டாலொழிய காந்தியாரைப் பலி கொடுத்த பெரும்பழி நம்மைவிட்டு அகலவே அகலாது.

"ஜாதி—மதவெறிகள் ஒழிக!" (3)

[2ம் பக்கத் தொடர்ச்சி]

ஈரோடு தந்த வள்ளல், ஈ. வே. ராமசாமி அவர்களும் அவரது பின்பற்றுவோரும் செய்த அறப்புரட்சி தான் இன்று நம் நாட்டில் ஒரு பெரிய தோர் மாற்றத்தை உண்டாக்கியிருக்கிறது. ஆயினும் இன்னும் பரிபூரண வெற்றியடைந்து விடவில்லை. அதற்கான வழியாது? சீர்திருத்தம்,—செம்மையான சீர்திருத்தம்,—சமூகக் கொடுமைகளால் அமுக்கப்பட்டு வளைந்து கிடக்கும் இளைஞர்களின், இளம் பெண்களின் வாழ்வின் வளைவைச் சிறிது சிறிதாய் நிமிர்த்தவல்ல உயர்ந்த சீர்திருத்தம் வேண்டும். சிலர் நினைப்பது போல், சீர்திருத்தம் என்றால், வெறும் புரோகித ஒழிப்பும், ஆரியச் சடங்குகள் அகற்றலும் மட்டுமல்லவே அல்ல.

மேலே தீட்டப்பட்டது போன்ற உரையாடல்கள் நடைபெறாதிருக்கவேண்டுமானால், ஒவ்வொரு யுவதியும் தன் விருப்பத்திற்கேற்ற, தன் உள்ளத்தை உண்மை அன்பால் கொள்ளை கொண்ட, தன்னை நல்வழியில் போற்றவல்ல, தன் வாழ்வில் வளம் ஊட்டவல்லதோர் இளைஞனைத் தேர்ந்தெடுக்கும் முறை வரவேண்டும். அதுதான் அடிப்படையான சீர்திருத்தம். ஒரு இளைஞனோ, ஒரு இளமங்கையோ விரும்பும் வகையில் தான் வாழ்க்கை ஒப்பந்தங்கள் நடைபெறவேண்டும். இதற்கு ஊர்ப்பெரு மக்கள் ஒத்துழைக்க வேண்டும். அத்துடன் அரசியலாரும் சட்டபூர்வகமாக இச்சீர்திருத்தத்தை வற்புறுத்தவேண்டும். கற்பின் செல்வி கண்ணகியின் வழித்தோன்றல்களாய தமிழ்ச் சோதரிகள் நன்கு மனத்தில் திருத்தமாய்ப் பதித்துக்கொள்ளவேண்டும்,

"பெண்ணிற் பெருந்தக்க
யாவுள கற்பென்னும்
திண்மை உண்டாகப் பெறின்"
"தற்காத்துத் தற்கொண்டான்
பேணித்தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள்
பெண்"

என்ற அருங்குறள் மணிகள் அளிக்கும் அறிவை, அறவுரையை! தம் கணவரின் ஆண்மை அரும் பண்புகளுடன் தமது பெண்மைப் பண்பையும் உண்மையாய்ப் பிணைத்துக்கொள்ளவேண்டும்.

அடுத்து, தலைவர் பெரியார்

ரோஜா முத்தையா

நட்ட கல்லும் பேசுமோ?

★

அன்று ஆரியர்கள் ஒரு காய்ந்த புல்லைக் காட்டிக் கட்கமேந்திய வீரர்களை வீணர்களாக்கினர். ஒரு கல்லைக் காட்டி கயவர்களாக்கினர் இந்த நாட்டு மக்களை. இல்லாத உலகத்தைக் காட்டி ஏமாற்றிவிட்டார்கள் இந்த நாட்டு வேந்தர்களை. மதமென்ற மயக்க மொழிபேசி, மக்களை மதியற்றவராக்கி, சிவன்—விஷ்ணு என்று பேசி, அவர்களுக்கு ஆபாச உருவங்களைக் கற்பித்துக் குறைமதியினரை முழுமூடராக்கும் குள்ளநரிச் செயல்களால் சமுதாயத்தின் மேல் அந்தஸ்தில் மேனிமினுக்கித்திரிய—உல்லாச வாழ்வு வாழ வசதி செய்து கொண்டனர். இதற்குத் தங்களுக்குச் சாதகமாகக் கடவுள், கர்மம், மதம் முதலியவைகளை இழுத்து மிரட்டி வருகின்றனர்.

மதம் வளர்ந்த வரலாறு, மனித வர்க்கத்தின் மடத்தனமும் மிருகப் பண்பும் வளர்ந்தவரலாறேயாகும், அஞ்சுதலும்—அறியாமையும் வளர்ந்த வரலாறேயாகும், சிந்தனையும் மனிதப் பண்பும் பலி பீடத்திலே பலியிடப் பட்டுவரும் வரலாறேயாகும். சாவைக் கண்டு அஞ்சிய மனிதன்—தனக்குப் புரியாத இயற்கைச் சக்திகளைக்கண்டு மிரண்ட மனிதன்—பகுத்தறிவு வளராத காலத்திலே வாழ்ந்த காட்டு மனிதன் கற்பனை உற்பத்தியிலே தோன்றியதே கடவுள்.

பிறகு ஆரிய நச்சரவுக் கூட்டத்தினரால்—அக்கூட்டத்தின் முயற்சியால் கல்லையும், மண்ணையும், மரத்தையும், இறந்த மனிதரையும் பயத்தோடு விழுந்து வணங்குகிற நிலையிலிருந்து அழகு, ஆண்மை, சக்தி, தாய்மை முதலிய பண்புகளுக்கு உருக்கொடுத்து வணங்குகிற அளவுக்கு உருவாக்கப்பட்டு வளர்ந்தது—வளர்ந்து வருகிறது கடவுள் நிலை.

ஒரு கல்லுக்கு 'அஷ்ட பந்தனக்கிரியை' முடிந்தவுடனே அது எந்தக் கடவுளைக் குறிப்பிடுவதாக எண்ணப்படுகிறதோ அந்தக்கடவுளின் பெயரைக் கற்பித்து, அதற்குள் அந்தக் கடவுள் இருப்பதாக நினைத்து அதற்கு உடை, உணவு விருப்பமென்று கூறிப் படைத்து வணங்கினர். ஒரு சில மதியற்றவர் தாங்கள் கல்லைத்தெய்வ பக்தியை எழுப்பிவிடும் ஒரு உபகரணமாக வைத்திருக்கிறோமே யொழிய, அதனையே கடவுளாகக் கருதுவதில்லை என்பார்கள். கல்வியறிவு படைத்த மதோன்மத்தர்கள் அறியாமையிலே உழன்று கிடக்கும் மக்களுக்குத் தெய்வத்தைப்பற்றிய உணர்வையுண்டாக்குவதற்கு ஞாபகச்சின்னங்களாகக் கற்களை உபயோகப்படுத்துகிறோம் என்பார்கள்.

தோழர்களே! இந்நாட்டு மக்கள் திரிமூர்த்திகளுடைய சிலையைப்பார்க்கும்பொழுது கடவுளுடைய எந்தச் சாயல்களை—குணங்களை நினைவு படுத்திக் கொள்ளுகிறார்கள்? சிவனுடைய உருவத்தைக் காட்டும் ஒரு கற்சிலையை ஒரு பெண் பார்க்கும் பொழுது, சிவன் சப்தரிஷிகளின் பத்தினிகளையும், துரோணாச்சாரியாருடைய மனைவி கிருபியையும், மற்றுமுள்ள எத்தனையோ பெண்களையும் கற்பழித்த 'காமச்சேஷ்டைகள்' யாவும்அவள் நினைவிற்கு வருமல்லவா? பிரம்மனுக்குச் சிலை அமைக்கப்பட்டிருந்தால் தன் குமாரத்திகளான திலோத்தமை, ஊர்வசியென்பவர்களைக்கூடிக் கலவி செய்து இன்பம் பெற ஆடி ஓடித்திரிந்து சிரமிழந்த பாவி—கயவன்—அயோக்கியன் என்று எண்ணிப் பார்ப்பார்களேயானால் ஒரு தன்மானமுடைய எந்தப் பெண்ணும் அந்தச் சிலையைப் பார்க்கவும் துணிவாளா? கிருஷ்ணனுடைய காமாந்தகாரப் படலங்களுக்குறைவிடம் 'பரஸ்திரீகளின்' பள்ளியறையல்லவா? முருகனுடைய உருவச் சிலையைக் காணும் பொழுது ஒரு பெண்ணுக்கு, வள்ளியுடன் அவன் செய்த ஆபாசச் செயல்கள் தானே நினைவிற்குவரும். ஏ! பொய்மையிலே உழலும் மானிடனே! உன் கற்சிலைகள் உன்னைப் பகுத்தறிவினின்றும் விலக்கி, பழமைக்குட்டையிலே—அறியாமையிலே அமிழ்த்த முயற்சிக்கின்றனவே. சிந்தித்துப்பார்.

கற்கடவுளுக்கு வருடந்தோறும் கல்யாணம் செய்து உற்சவங்கள் கொண்டாடுகிறார்கள். அந்தக் கற்சிலைக் கடவுள்களுக்குநோய்களும் வந்துதுன்புறுத்துமாம்!

''வாதகாலாந்தமக்கு, மைத்துனர்க்கு நீரழிவாம், போதப்பெருவயிறாம் புத்திரர்க்கு—மாதரையில்—வந்த வினைதீர்க்க மருந்தறியான் இக்கடவுள், எந்த வினை தீர்ப்பானிவன்.''

சிவனுக்கு வாதநோய், யானை முகத்தோனுக்குப் பெருவயிறு, விஷ்ணுவுக்கு நீரழிவு. பாவம் கடவுள்கள் என்ன செய்வார்கள்? வேதனையால் புலம்புகிறார்கள். அகத்தியராவது மருந்து கொடுத்துக் குணப்படுத்தலாகாதா? அருணாசலமென்னும் தலத்தை எண்ணிப் பார்த்தாலே சைத்திய, பைத்திய, வாதநோய்களெல்லாம் பறந்துவிடுமாமே.

''துற்றால நாதநுக்குந் துழல்வாய் மணியம்மனுக்கும் வற்றாக்கடி நீரும் மாறாத்தலைவிடியுமாம்'' பாவத்தால் அல்லவா உலகில் வியாதி, துன்பம், மரணம் வந்தன என்று புராணங்கள் கூறுகின்றன. அவ்வாறானால் இந்த தேவர்களும் நம்மைப்போல மானிடரென்று அவர்கள் வரலாறுகளே நமக்கறிவிக்கவில்லையா? ஒவ்வொரு உருவங்களுக்குள்ளே ஒவ்வொரு கடவுள் புகுந்திருக்கிறார் என்று நம்பி, அந்தக் கடவுளுக்கு விருப்பமானவை என்று ஆடையாபரணங்கள் தரிப்பித்து, மலர்கள் சூடி, களபங்கள் பூசி, தாம்பூலங்களை அவைகளின் கைகளில் வைத்து பள்ளியறையில் விலையுயர்ந்த பஞ்சணைகள் மீது சயனிக்க வைத்து, ஊடிச் சடங்கு கொண்டாடி, அம்மன் கோபித்துக்கொண்டு வீட்டை விட்டு ஓடிப்போய்விட்டாள் என்று கூறி, கணவனான கடவுளுக்கு நலவு கூறி அழைத்துக்கொண்டு வைத்துக் கொள்கிறதாய் கோரணிகள் செய்தும், குளிர் காலத்தில் வெப்பந்தரும்

வழியுறுத்திக்கூறும் திட்டத்தைக் காண்போம். அதாவது ''தாலி கட்டும் முறை''. இது மிக மிக முக்கியமானது.

''எந்த வினாடியிலே இறுக்கி மூணு முடிச்சுப்போட்டேனோ கழுத்திலே, அந்த நேரத்திலே யிருந்து அவநம்ம அடிமைதானே!''

இதுதான் சீர்திருத்தம் உணராத, விரும்பாத ஆடவர்கூறும் சாதாரண வார்த்தைகள். ''இக் கருத்துக்கொண்டே இந்த முறை இருப்பதால், அதாவது பெண்ணை அவளது சுதந்தரத்தைப் பறிக்கும் சின்னமாகத் தாலியைக் கட்டுவதினால் அம்முறை ஒழிக்கப்படவேண்டும்'' என்கிறார் தலைவர் பெரியார். அவரது பிரசாரத்தால் இன்று பல திருமணங்கள் தாலியில்லாமல் நடைபெறுகின்றன. அவை மேன்மேலும் பரவ வேண்டும், வளரவேண்டும்.

ஆகவே, எதிர்கால நிர்மாணிகளும், வருங்கால வீரர்களும், வீரத் தமிழ்நாட்டின் எதிர்காலக் குடிகளுமாகப் போகும் இளைஞர்களை ஈன்றெடுத்துப் பாருக்குத் தரும் கடமை பெற்றவர் நம் பெண்டிர் என்றால், அவர்கள் சிறந்த அறிவுடன், ஆண்மையுடன், சீர்திருத்தத்துடன் இருந்தால்தானே முடியும்? அவர்கள் நலஞ்சிறக்கப் பெரிதும் இளைஞர், பெரியோர் அனைவரும் உழைப்பார்களாக!

வெல்க தலைவர் பெரியார்!

ஒழிக இழிவு!!

சிந்தனைச் சிற்பியின் தெளிவு!

மொழி—எழுத்து	விலை 0—4—0
திராவிடக்கழக லட்சியம்	,, 0—4—0
பெண் ஏன் அடிமையானாள்	,, 0—8—0

மூடநம்பிக்கையை முறியடிக்க!

இயற்கை வழி—ஆத்மீக வழி	,, 0—4—0

பார்ப்பனியத்தின் நச்சுப்பற்கள்?

பணம் பிடுங்கிப் பார்ப்பனர்	,, 0—14—0

படைவீரர் காட்டும் பெரியார்!

இதோ! பெரியாரில் பெரியார்!	,, 0—6—0

வியாபாரிகளுக்குக் கமிஷன் உண்டு.

கிடைக்குமிடம்:—

நாதன் கம்பெனி லிமிடெட், கச்சேரி வீதி, ஈரோடு.

உடைகள் உடுத்தி, வேனிற்காலத்தில் விசிறிகளால் வீசுவதும், கொசுக்கடி காலத்தில் கொசு வலைகள் கட்டியும் பல அறிவற்ற செய்கைகளைச் செய்கிறார்கள். குழந்தைகள் பொம்மைகளையும் மரப்பாவைகளையும் வைத்துக் கொஞ்சி விளையாடுவது போல, மணல் வீடுகட்டி மணற்சோறு சமைத்துப் பரிமாறுவதைப் போல அறியாமை வயப்பட்ட பெரியோர்கள் அம்மனுக்கும் கடவுளுக்கும் செய்கிற உபசாரணைகளையும் உற்சவங்களையும் கவனிக்கிற பகுத்தறிவாளர்கள்—சிந்தனையாளர்கள், குழந்தைகளின் செய்கைகளுக்கும் இவர்களுக்கும் உள்ள வித்தியாச மின்மையைக் காணுவர். சிறியோர் தங்களுக்குத் தக்கதாக விளையாடுகிறார்கள்—அறிவற்ற பெரியமனிதர்களும் தங்களுக்குத் தக்கதாக விளையாடுகிறார்கள் என்று ஒரு சிலர் நொண்டிச் சமாதானம் கூறலாம். கடவுள் ஒருவனுக்கு அவன் வணங்கும் கற்சிலையைப்போல உணர்ச்சியற்ற பிள்ளையை அவன் மனைவி பெறும்படி செய்தால், குழந்தை இறந்து பிறந்ததென்றுகூறி புதைத்து விடாமல், சிலையை உயிருள்ள மனிதனாகப் பாவித்து மற்றவர் வழிபடுமாறு செய்வித்த பார்ப்பனக்குருக்களிடம் சென்று குழந்தைக்கு உயிர் கொடும் என்று கூறுவானா? கல்லுக்குப் 'பிரதிஸ்டை' செய்யுங்குருக்கள் வீட்டில் ஒருவர் இறந்து விட்டால் அந்தச் சவத்திற்கு உயிரைத் திருப்பி அளிக்க முயற்சிக்கிறாரா? மனிதனுக்கு உயிரளிக்க முடியாதவர் கல்லுக்கும், பஞ்சலோகத்திற்கும் எவ்வாறு உயிரளிக்க முடியும் என்று எண்ணிப்பார்த்தாயா மதியற்றமானிடப்பதரே! ஏ! சூழ்ச்சியின் சின்னமே! கல்லுக்குக் கண்ணை உண்டுபண்ணினாயே—அதில் உன் கண்ணிலிருக்கிற ஆறுவகைத் தோல்களையும், அவைகளின் தொழில்களையும், கண்ணீர் வருவதையும், மூடிவிழிக்கவேண்டிய வகைகளையும் உன்னால் உண்டுபண்ண முடிந்ததா? ஏன் மௌனம் சாதிக்கிறாய்? ஓடாதே! நில்!! இன்னமும் உண்டு ஊன்றிக் கேள்! நீ உண்டுபண்ணின கண்களைப்போல் உனக்கும் அந்தக் கடவுள் கண்ணை உண்டு பண்ணியிருந்தால் நீ வைதீகக் குருக்கள் என்ற பெயரெடுத்து திராவிட மக்களைக் கெடுக்கச் சிலைகளைச் செய்யமுடியுமா? நீ குருடனென்று ஒன்றுக்கும் உதவாமற்போயிருப்பாயே! நீ குருடனாயிருந்தாலும் கவலையில்லை. ஆனால் நீ எங்கள் வீர இனத்தவரைக் கெடுக்கும்படி கற்சிலைகளைச் செய்தாயே! பகுத்தறிவாளர்களே, திராவிடமக்களே, வீர இனத்தவரே, உங்கள் உடலுக்குள் இருக்கும் உறுப்புகளையும், அவைகளின் தொழில்களையும் உணர்ந்து, அவைகளைப்பற்றி சிந்தித்த பிறகு, நீங்கள் வணங்குகிற சிலைக்கு பார்ப்பனக்குருக்களால் உயிர் பிரதிஷ்டை மந்திரம் சொல்லி அஷ்டபந்தனக் கும்பாபிஷேகம் செய்த பிறகாவது அந்த சிலைகளுக்கு உங்களுக்கு இருப்பதைப் போன்ற உணர்ச்சிகள் உண்டாயிற்றா? பிறகு ஏன் கொசுக்கடியை நிவர்த்திக்கச் சிலைகளுக்கு கொசுவலையை கட்டுகிறார்கள்? சிந்தியுங்கள்! அந்தோ பரிதாபம்! அந்தக்கடவுளர்களின் கைகால்களை முறித்து உடைத்து அவைகளின் மேலிருக்கும் ஆடையாபரணங்களையும் திருடர்கள் களவாடிக் கொண்டு செல்லும் பொழுது, கடவுளர்களின் நீண்ட பொறுமைக்குக் காரணம் என்னவோ?

"குடி அரசு"

வாரப்பத்திரிகைக்கு ஏஜண்டுகள் இல்லாத ஊர்களுக்கு

ஏஜண்டுகள் தேவை.

நிபந்தனை விபரங்களுக்கு எழுதவும்:—

மானேஜர், குடி அரசு,
42, கச்சேரிவீதி, ஈரோடு.

தோழர்களே! ஆரிய இதிகாசப் புராணங்களில் எழுதியிருக்கும் ஆபாசங்களையும் தேவர்களுடைய நடத்தைகளையும் சூழ்ச்சியறியா நம் திராவிட மக்களுக்கு அறிய வைக்கவே, கோவில் வாயில் கதவுகளிலும், தேர்க் கட்டைகளிலும், மத ஆபாசங்களைக் காட்டிய சித்திரங்களை பார்ப்பனர்கள் எழுதி வைத்திருக்கிறார்கள்? அவைகளை தன்மானமுடைய நம் பெண்டிர் பார்ப்பதா?

எனவேதான் பகுத்தறிவியக்கம் அன்றே கூறிற்று,

"நட்டகல்லைத் தெய்வமென்று நாலு
புட்பம் சாத்தியே
சுற்றிவந்து முணமுணென்று சொல்லு
மந்திரமேதடா
நட்டகல்லும் பேசுமோ
நாதனுள்ளிருக்கையில்
சுட்டசட்டி சட்டுவம்
கறிச்சுவையறியுமோ" என்று.

பார்ப்பனக்குருக்கள் தாங்கள் வாழ, தங்கள் இனம் உய்ய ஏற்படுத்திக் கொண்ட தற்பாதுகாப்புகளே இந்த நட்டகல்லுகள். மனித உருவிலே நடமாடும் இந்தக்காட்டு மிராண்டி கால அழிவு அருளிகள் இங்கன்றி வேறெங்குமில்லை. அங்கே அணுகுண்டு, இங்கே சிவபெருமானின் நெற்றிக்கண்! அங்கே கடவுள், அன்பு—அறிவுவடிவம், இங்கேதான் ஆமை வராக வடிவம்! இந்த இழிநிலை மாறவேண்டாமா? மாறத்தான் வேண்டும் என்று திராவிடம் நிமிர்ந்து கூறுகிறது கேளாக்காதினருக்குக்கேட்கும்படி.

கோவில்களிலிருக்கும் 'கற்களுக்கு மட்டும் வாயிருந்தால், அவை சொல்லும் பார்ப்பனக் குருக்கள் செய்யும் ஆபாசச்செய்கைகளை, சூழ்ச்சிகளை. இங்கே பச்சிளம் குழந்தைகள் பால், பால் என்று கதறும் பொழுது அங்கே—நட்டகல்லுக்குப் பாலாபிஷேகம்.

இந்த நிலையை ஏன் நீடிக்கவிடவேண்டும்? பக்தியின் பெயரால் பாதகங்கள் நடைபெற அனுமதிப்பதா? அவைகள் நடைபெறும் நாடக அரங்குகளாகக் கோயில்கள் இருப்பதைவிட அவைகளை இடித்துத் தரைமட்டமாக்குவதுதானே மேலானது. கற்சிலைகளை உடைத்துத்தள்ளுங்கள்! அவைகளிடமுள்ள செல்வங்களைப் பொது நலத்திற்கென பயன்படுத்துங்கள்! இப்பணி தவிர இளைஞர்க்கு வேறு எப்பணி வேண்டும்?

"ஜான்சன்"

Edited, Printed and Published by N. Karivaradaswamy at the Tamilian Press 42, Cutchery street, ERODE